எழுத்து

மே
64

ஆறாம் ஆண்டு

50
காசு

65

ஆசிரியர் :
சி. சு. செல்லப்பா

பாரதிக்குப்பின் பாரதிதாசன் 86
தலையங்கம்

பாரதிதாசன் கவிதைகள் 87
கு. ப. ராஜகோபாலன்

ஊமைச்சி காதல் 89
'ருவீ'

சங்கக் கவிகளின் மொழி உணர்வு 91
சி. கனகசபாபதி

காட்சி 94
கலீல் கி:ப்ரான்

ஏழு கதைகள் 95
தர்மு சிவராமு

ஊடல் 98
எஸ். வைத்தீஸ்வரன்

மலரும் மணமும் 99
பி. எஸ். ராமையா

சொல் 102
ந பிச்சமூர்த்தி

மூன்று கவிதைகள் 103
நா. வெங்கடராமன்

என்ன வந்தது ? 103
சி. மணி

எண்(ணம்) 103
ம. ந. ராமசாமி

6-ம் ஆண்டு
ஏடு 65
மே 1964

எழுத்து
ஆசிரியர் :
சி. சு. செல்லப்பா

'எழுத்து' ஒவ்வொரு இங்கிலீஷ் மாத முதல் தேதியன்று வெளிவரும் மாத ஏடு. தனிப் பிரதி காசு 50. அரை ஆண்டு சந்தா ரூ. 3-00 ஒரு ஆண்டு சந்தா ரூ. 5-00 வெளிநாடுகளுக்கு ரூ. 6-00. சந்தா, கட்டுரை சம்பந்தமான கடிதங்கள் எல்லாம் 'எழுத்து' (Ezhutthu) 19-A, பிள்ளையார் கோயில்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 என்ற முகவரிக்கு எழுதப்பட வேண்டும்.

தலையங்கம்

பாரதிக்குப் பின் பாரதிதாசன்

கவிகள் அடிக்கடி தோன்றுவதில்லை என்று சொல்வதுண்டு. ஆனல் கவிகள் அடிக்கடி இறந்து விடுகிருர்கள். சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பாரதி மரபு கவிஞன் ச. து, சுப்ரமண்ய யோகியாரை இழந்தோம். இந்த ஏழெட்டு மாதங்களுக்கு உள்ளாகவே நாம், பாரதி மரபு கவிஞன் மட்டும் இல்லை, பாரதியோடுகூட இருந்து பாரதியின் ஆதர்சம் பெற்று நல்ல கவிதைகள் எழுதி, தமிழ் கவிதை உலகில் பாரதி வழி கவிஞர்களில் முதல்வராக இருந்த ஒரு பெரிய கவியை நாம் இழந்து விட்டோம். எழுபத்தி மூன்ருவது வயதில்தான் அவர் ஆயுள் முடிந்திருக்கிறது என்ருலும் முப்பது ஆண்டுகளுக்கு முன் மறுமலர்ச்சி காலத்தில், பாரதியோடு நேரடித் தொடர்பு பெற்று அருளும் பெற்று கவிதைகள் எழுதி வந்த ஒரு கவியை, அன்றய இளவயதுகவிஞனை அல்பாயுசில் இன்று இழந்து விட்டது போன்ற ஒரு உணர்வுதான் ஏற்படுகிறது.

1933ல் 'சுதந்திரச்சங்கு' பத்திரிகையில் வெளியான கவிதை இது ;

கமலம் அடுக்கிய செவ்விதழால்—மலர்க்
காட்டினில் வண்டின் இசைவளத்தால்
கமழ்தரு தென்றல் சிலிர்சிலிர்ப்பால்—கருங்
கண்மலரால் முல்லை வெண்ணிசைப்பால்
அமையும் அன்னங்களில் மென்னடையால்—மயில்
ஆட்டத்தினுல் தளிர் ஊட்டத்தினுல்
சமையும் ஒருத்தி—அப்பூஞ்சோலை எனைத்
தன்வசம் ஆக்கிவிட்டாள் ஒருநாள்

சோலை அணங்கொடு திண்ணையிலே—நான்
தோளினை ஊன்றி இருக்கையிலே
சேலைநிகர்த்த விழியுடையாள்—என்றன்
செந்தமிழ்ப் பத்தினி வந்துவிட்டாள்
சோலையெலாம் ஒளிவான மெலாம்—நல்ல
தோகையர் கூட்டமெலாம் அளிக்கும்
கோல இன்பத்தையென் உள்ளத்திலே—வந்து
கொட்டி விட்டாள் எனைத் தொட்டிழுத்தாள்.'

இந்த கவிதை வெளியானபோது படிக்க வாய்ப்பு பெற்ற வாசகர்களுக்கும் மறுமலர்ச்சி படைப்பாளர்களுக்கும், பாரதியே தொடர்ந்து எழுதி வருவது போன்ற ஒரு பிரமை ஏற்பட்டதை இன்று ஞாபகப் படுத்திக்கொள்ளத் தோன்றுகிறது. 'சுதந்திரச்சங்கு' பத்திரிகையில் பாரதிதாசனை அறிமுகப்படுத்துகையில் சங்கு சுப்ரமண்யன் எழுதினர் :

'புதுவை பாரதிதாசன் ஓர் அபூர்வமான கவிஞர். கவிதை பாடும்போது வார்த்தைகள் அவரிடம் கைகட்டி நிற்பனபோலும்! நதி ஓடுவது போல் அவ்வளவு சுலபமாக அவரது செய்யுள்களிருப்பதற்குக் காரணம் ஒரு காலத்தில் அவருக்கு கவிச்சக்கரவர்த்தி பாரதியாரோடு ஏற்பட்ட உறவே என்று தோன்றுகிறது.'

பாரதிதாசன் ஒரு 'அபூர்வமான கவி' என்பதை அன்றய வாசக உள்ளம் உணர்ந்துவிட்டது. இன்று அவரை 'புரட்சி கவிஞர்' என்று எடுப்பாக குறிப்பிடப் படுகிறது. 'புரட்சி' என்ற சொல்லுக்கு இன்று சமூக பொருளாதார ரீதியாக ஒரு அர்த்தத்தில் பாரதிதாசனை ஒரு சிமிழுக்குள் அடைத்துப் பார்ப்பது சரியானது இல்லை. எந்த கவியும் புரட்சி செய்பவன்தான். பாரதி இல்லையா, அவருக்கு முந்தினவர்கள் இல்லையா ? பின் வருபவர்களும் இல்லையா ? ஆகவே பாரதிதாசனை பாரதிக்கு பிறகு நாம் பார்க்கும் ஒரு உயர்ந்த கவி என்று சொல்வதுதான் சரி. கவிதை உள்ளடக்கியசமூக சீர்திருத்தப் பொருளை, நாஸ்தீகவாதத்தை, வகுப்பு மாற்சர்யத்தை எல்லாம் கொண்டு புரட்சி என்பது அர்த்தமற்றது. சொல்லப்போனல் இந்தவிதமான அப்பட்டமான உள்ளடக்கத்துக்கு முக்யத்வம் கவி கொடுத்தாலும் சரி, ரசிகன் கொடுத்தாலும்சரி கவிதை பாழ்படுகிறது என்று சொல்லவேண்டும்.

பாரதிதாசனைப்பற்றி கு. ப. ரா. எழுதுகையில், 'பாரதிக்குப் பிறகு தமிழ் நாட்டில் ஒரு உண்மையான கவி இருக்கிருர். அவரிடம் நாம் எதுவேண்டுமானுலும் எதிர்பார்க்கலாம்' என்று கூறிவிட்டு பிறகு முடிவுரையாக கூறி இருக்கிருர் :

பிரசாரத்திற்கு அவர் கவிதையை அடிமைப் படுத்த வேண்டாமென்று, 'நான் அவருடைய பக்தர்களில் ஒருவன் என்ற முறையில், தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.'

ஆனல் அந்த பக்தரின் வேண்டுகோளை தெய்வம் நிறைவேற்றின தாகத் தெரியவில்லை. ஒரு கவியை அப்படி திருப்பிவிடவும் முடியாது. பாரதிதாசன் வெகு உக்கிரமாக சீர்திருத்தத்தில், பிரசாரத்திலே முனைந்தார். அவரது பின் நாளத்து கவிதைகள் புரட்சிக்கருத்துக்களை வெளியிட்டன. ஆனுல் கவிதைச் சிறப்பு பாதிக்கப்பட்டுத்தான். கு ப, ரா. சொன்னதுபோல் கவிதை யழகு எங்காவது இருக்காமல் இல்லை, இந்த கவிதைகளிலும். ஆனல் பூர்ண மேதையையும் வெளிப்படுத்துவனவாக அமையவில்லை என்பதுதான்.

ஏராளமான கவிதைகளை எழுதியுள்ள பாரதிதாசன் தன் மேதையை காட்டி இருக்கிருர். தேர்ந்தெடுக்கப் பட்ட கவிதைத் தொகுப்பு இதை நிரூபிக்கும். கவிதைத் துறையில், பாரதிக்குப் பிறகு பாரதிதாசன்—இந்த இடம் அவருக்கு உண்டு.

பாரதிதாசன் கவிதைகள்

கு. ப. ராஜகோபாலன்

(1936ல் மணிக்கொடியில் பிரசுரமான இந்த மதிப்புரை எடுத்துத் தரப்பட்டிருக்கிறது.)

[புதுச்சேரி 'பாரதிதாஸன்' (கனக சுப்புரத்தினம்) இயற்றியவை. வெளியிட்டவர்; டி. எஸ். குஞ்சிதம், வேணுகோபாலபுரம், கடலூர், என். டி விலை 8 அணா]

நான் முதன் முதலாகப் பாரதி தாஸன் அவர்களின் தனிப் பாடல்களைப் பழைய மணிக்கொடி வாரப் பதிப்பில் பார்த்தேன். அவைகளிலிருந்த வார்த்தை நயத்தையும், சொல் வேகத்தையும், தெளிவையும், உண்மையான கவிதை ஸாரத்தையும் கண்டு திகைப்பும் சந்தோஷமும் கொண்டேன். 'பாரதிக்குப் பிறகு தமிழ் நாட்டில் ஒரு உண்மையான கவி இருக்கிறார். அவரிடம் நாம் எதுவேண்டுமானாலும் எதிர்பார்க்கலாம். நான் படித்த வரிகளை எழுதக்கூடிய ஒருவர் ஒரு போதும் மட்டமாக எழுத முடியாது' என்று சொல்லிக் கொண்டேன். பாரதிதாஸன் தம்முடைய தனிப் பாடல்களைப் புத்தகமாகத் திரட்டாதது ஒரு பெருங் குறையென்று என் நண்பர் ஒருவரும் நானும் அடிக்கடி பேசிக்கொள்வதுண்டு.

ஆகையால் நாங்கள் இருவரும் பாரதிதாஸனைச் சென்னையில் சமீபத்தில் கண்டபோது அவர் தம் பாடல்களைத் திரட்டுகிறார் என்று கேள்விப்பட்டதும் அகமகிழ்ந்து போனோம். அவருடைய கம்பீரமான குரலில், பாரதியின் உத்தரவின் பேரில் அவர் பாடிய முதல் பாட்டை,

'எங்கெங்குக் காணினும் சக்தியடா!'

என்று ஆரம்பித்து, உடல புளகாங்கிதமடையப் பாடின பொழுதும், அதை ஒட்டிய கதையைச் சொன்ன பொழுதும், 'தமிழ்நாட்டின் உயிர் வாழும் கவிகளில் முதல் ஸ்தானம்கூட இவர் பெறலாம் போலிருக்கிறதே!' என்று வியந்தோம். அவர் புத்தகத்தை வெகு ஆவலுடன் எதிர்பார்த்தோம். ஏனெனில் நாங்கள் பார்த்தவை அவருடைய பாடல்களில் ஒரு சிலவே.

'பாரதிதாஸன் கவிதைகள்' என்ற புத்தகம் எனக்குக் கொஞ்சம் ஏமாற்றம் அளிந்துவிட்டது என்று ஆழ்ந்த மன வருத்தத்துடனும் திகைப்புடனும் தெரிவித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. நான் எதிர் பார்த்த உணர்ச்சிப் பெருக்கும் கவிதைச் செருக்கும் இப்புத்தகத்தில் அவ்வளவு காணோம் என்பதுதான் அதற்குக் காரணம் என்று முதலிலேயே சொல்லிவிடுகிறேன்.

கவிதை யழகு இல்லை யென்ப தன்று. பாரதி தாஸன் எழுத்தில் எங்காவது அது இருக்கத் தவறாது.

கூடத்திலே மனப் பாடத்திலே—விழி
கூடிக் கிடந்திடும் ஆணழகை,
ஓடைக் குளிர்மலர்ப் பார்வையினால்—அவள்
உண்ணத் தலைப்படு நேரத்திலே,
பாடம் படித்து நிமிர்ந்த விழி—தனில்
பட்டுத் தெறித்தது மானின் விழி
ஆடை திருத்திநின்றாள் அவள்தான்—இவன்
ஆயிரம் ஏடு திருப்புகின்றான்!

போலவும்,

ஒட்டும் இரண்டுளத்தைத்—தம்மில்
ஓங்கிய காதலினைப்
பிட்டுப் பிட்டுப் புகன்றார்—அதைப்
பெற்றவர் கேட்க வில்லை
குட்டை மனத்தாலே—அவர்
கோபப் பெருக்காலே
வெட்டிப் பிரிக்க வந்தார்—அந்த
வீணையை நாதத்தினை!

போலவும்,

ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட
'என்னை எழு'தென்று சொன்னது வான்!
ஓடையும் தாமரைப் பூக்களும் தங்களின்
ஓவியம் திட்டுக என்றுரைக்கும்!
காடும் கழனியும் கார்முகிலும் வந்து
கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்!
ஆடும் மயில் நிகர் பெண்களெல்லாம் உயிர்
அன்பினைச் சித்திரம் செய்க, என்றார்?

போலவும் புத்தகத்தில் வரிகள் இல்லாமலில்லை.

ஆனால், ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட எழுபத்திரண்டு பாடல்களில் கைவிரல்களில் எண்ணக்கூடியவையே முதல்தரமானவை என்று சொல்லவேண்டியிருக்கும் நிலைமைக்காகவே நான் வருத்தப்படுகிறேன்.

'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்', 'புரட்சிக்'கவி, 'வீரத் தாய்'—இம் மூன்றும் நீண்ட பாடல்கள் சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' என்பது பாரதியின் 'குயில்' பாணியில் எழுதப்பட்டிருக்கிறது. சில இடங்களில் மிகவும் அழகாக இருக்கிறது.

குப்பன் வஞ்சியின் காதலன், இருவரும் சஞ்சீவி பருவதத்தின் சாரலில் வசிக்கிறார்கள். ஒருநாள் அவள் காதலனை இரண்டு மூலிகைகள் கொண்டுவரச் சொல்லுகிறாள். அவைகளின் அந்தரங்கத்தைச் சொல்லி அவை வேண்டாம் என்று அவன் சொல்லியும் அவள் கேட்கவில்லை.

'பெண்ணுக் கிதுதகுமோ? வண்ணமலர்ச்
சோலையிலே
எண்ணம்வே ருகி இருக்கின்றேன் நான்' என்று
கண்ணை அவள் கண்ணிலிட்டுக் கையேந்தி
நின்றிட்டான்.

அவள், 'உயிர் துறப்பேன்' என்று பயமுறுத்து கிருள். குப்பன், மூலிகை கொண்டுவந்தால் என்ன தருவாய்?' என்று கேட்டேன்.

'முன்னே இதைக்கொடுத்தால்
முத்தம் பிற' கென்ருள்.

....

'ஆகையால் ஓர்முத்தம் அச்சாரம்
போ' டென்ருன்.

....

கிட்டரிய காதற் கிழத்தி இடும்வேலை
விட்டெறிந்த கல்லைப்போல் மேலேறிப்
பாயாதோ !

மூலிகையைக் கண்டெடுத்து விடுகிருர்கள். ஒன்றைத் தின்றவுடன் உலகத்தில் பேசுவதெல்லாம் கேட்கிறது. (இங்கே பிரசாரம் நடக்கிறது. ஒரு பிரெஞ்சுக்காரன் இதாலியனுக்கு சமத்துவத்தைப் பற்றிப் பேசுகிருன். ஒரு அமெரிக்கன் பேசுவதும் கேட்கிறது. ஒரு ஆங்கிலேயனும் பேசுகிருன்:

'........ ஒன்றுக்கும் அஞ்சாதீர்!
நாவலந்தீவு நமைவிட்டுப் போகாது
வாழ்கின்ருர் முப்பத்து முக்கோடி மக்கள் என்ருல்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகை யிருக்கும்.

....

பேதம் வளர்க்கப் பெரும் பெரும் புராணங்கள்!
சாதிச்சண் டைவளர்க்கத் தக்கஇதி காசங்கள்!

....

தேன்சுரக்கப் பேசிஇந்து தேசத்தைத்
தின்னுதற்கு
வான்சுரரை விட்டுவந்த பூசுரரும் வாழ்கின்ருர்.

....

பொற்புள்ள மாந்தர்களைக் கல்லாக்கி யேஅந்தக்
கற்கள் கடவுள்களாய்க் காணப் படும்அங்கே.'

அவர்கள் கையோடு கை கலந்து முத்தமிடப் போகையிலே ஒரு பாகவதர் கதை செய்வது கேட்கிறது.

ஜாம்பவான் ஹனுமாரைத் துதித்து சஞ்சீவி பருவதத்தை எடுத்துவரச் சொல்லும் சந்தர்ப்பம். குப்பன், 'ஐயேயோ. மோசம் வந்துவிட்டதே!' என்கிருன்.

'எப்படித்தான் நாம் பிழைப்போம்' ஏதும்
சஞ்சீவி பருவதத்தைத் தாவித் தரையோடு
பஞ்சிருக்கும் முட்டை போல் பாவி அவன் எவனே
தூக்குகின்ருன்! வஞ்சி! சுகித்திருக்க
எண்ணிணையே!

சாக்காடு வந்ததடி!'

வஞ்சி சமாதானப் படுத்துகிருள்:

'காதல் நிசம். இக் கனிமுத்தம் மிக்க உண்மை!
மாதுதோள் உம்தோள் மருவுவது மெய்யாகும்.'

மலையை ஹனுமார் கொண்டு போனவுடன் செத்த ராமனும் லக்ஷ்மணனும் சேர்ந்தெழுந்தார். (இங்கு கவி சொல்லும் கதை பிசகு.) ஹனுமார் மறுபடியும் பருவதத்தை இருந்த இடத்தில் வைத்துவிட்டார்.

......மலையைக் கடுகளவும் ஆடாமல்
கண்ணுடிப் பாத்திரத்தைக் கல்தரையில்
வைப்பதுபோல்

வைத்துவிட்டாராம்!

பிறகு காட்சி தரும் மூலிகையைத் தின்கிருர்கள். உடனே, மனிதர் கூட்டத்தையும், பட்டை நாமக்கார பாகவதர் ரூபாயைத் தட்டிப் பார்க்கின்றதையும் பார்த்தார்கள்.

உடனே வஞ்சி மூடப் பழக்கங்களையும் மூட நம்பிக்கைகளையும் பற்றி பிரசங்கம் செய்கிருள்:

'மூடப் பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவ தென்ருே? உயர்வதென்ருே
நானறியேன்.

என்கிருள்.

இருவரும் இயற்கை அழகைக் கண்டு ஆறுதல் அடைகிருர்கள்.

'மாலைப் பொழுதும் வடிவழகு காட்டுதுபார்!
சாலையிலோர் அன்னத்தைத் தன்பேடு
தேடுதுபார்.

என்னடி சொல்கின்ருய் ஏடிஇளவஞ்சி?
என்கிருன் குப்பன். அவள்,

'.. ...காதலரே நாம் விரைவாய்ச்
சாரல் அடைவோமே காதலுக்குத் தக்க இடம்'
என்கிருள்.

கவிதையின் போக்கை ஒருவாறு வாசகருக்குக் காட்டுவதற்கே இதை மட்டும் கொஞ்சம் விரிவாக எழுதியிருக்கிறேன்.

'புரட்சிக்கவி' என்பது பில்ஹணனின் காதல் கதை. 'வீரத் தாய்' என்பது ஒரு நாட்டியக் காவியம் 'புரட்சிக் கவி'யில் சில நல்ல வரிகள் இருக்கின்றன.

முதல் மூன்று பகுதிகளுக்குள்தான் கவிதையின் அம்சங்கள் இருக்கின்றன. கடைசி மூன்று பகுதிகளும் பிரசாரச் செய்யுட்கள் நிறைந்திருக்கின்றன. 'தமிழ்' என்ற பகுதி அவ்வளவு உயர்ந்ததன்று. முதல் மூன்று பகுதிகளிலும் கவிதை யம்சமே இல்லாத இடங்கள் இருக்கின்றன

'மக்கள் நிலை' என்ற ஒரு பாடலுக்கு ஈடு சொல்லக்கூடிய மற்ருெரு முழுப் பாடல் புத்தகத்தில் இல்லை அடுத்தபுத்தகத்தில் பாரதிதாஸன் தம் பூர்ண மேதையையும் வெளிப்படுத்தும் ஒரு பாடல் திரட்டு வருமென்று நாம் எதிர்பார்ப்போம். ஏனெனில் 'சரக்குள்ள ஆள் பாரதி தாஸன்; ஒரு புத்தகத்தில் அது தென்படத் தவறினுலும் மற்ருென்றில் தோன்ருமல் இருக்க முடியாது.

பிரசாரத்திற்கு அவர் கவிதையை அடிமைப்படுத்த வேண்டாமென்று, நான் அவருடைய பக்தர்களில் ஒருவன் என்ற முறையில், தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஊமைச்சி காதல்

'ருலி'

(தமிழ் சிறுகதை என்ற என் கட்டுரை தொடரில் குறிப்பிடப்படும் சிலகதைகளை தாங்கள் படிக்க வாய்ப்பு கிடைக்கவில்லை என்றும் அவைகளை முடிந்தமட்டுக்கு பிரசுரிக்கும்படியும் வாசகர் கேட்டுக்கொண்டதுக்கு இணங்க 'ஊமைச்சி காதல்'ம் 'மலரும் மணமும்'ம் இந்த ஏட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் சிறு கதை கட்டுரை அடுத்த ஏட்டில் தொடரும்)

சுப்பலக்ஷ்மி அம்மாள் நல்ல மனுஷி. வேதராமய்யர் தங்கக் கம்பி. இருவரும் அடக்கத்தின் அவதாரங்கள். கிராம வாழ்க்கைதான் அவர்களுக்கு ஒத்து இருந்தது. அவர்களுக்கு சாப்பாட்டுக்கு ஒரு குறைவும் கடவுள் வைக்கவில்லை, வேண்டிய அளவுக்கு மேலேயே இருந்தது. அவர்கள் ஊருக்கு அவர்களே பெரிய மனிதர்கள்.

சுப்பலக்ஷ்மி அம்மாளுக்கு வேறு ஒரு குறைவும் கிடையாது ஆனால் களங்கமில்லாதது எது? வேலை இல்லாதவர் யார்? அவர்களுக்கு பகவான் அருளியது ஒரே பெண் சிசு: பெண் பிறந்ததனால் சுப்பலக்ஷ்மி அம்மாளுக்குக் குறை ஒன்றுமில்லை. பெண்ணுக்குத்தானென்ன? தங்கப்பதுமை போலிருந்தது. சுப்பலக்ஷ்மி அம்மாளின் கவலையும் வேதராமய்யரின் வருத்தமும் அது பெண்ணாய்ப் பிறந்ததனாலில்லை. அது பேசாத பெண்ணாய் பிறந்ததுதான் அவர்கள் குறை. அவர்களுடைய மனத்தாங்கல்.

எத்தனையோ குழந்தைகள் இரண்டு மூன்று வயது வரையில் மழலைச் சொல் கூட இல்லாமலிருந்தது—பிறகு முடிவு, முற்றுப்புள்ளியில்லாமல் பேசுவதில்லையா?

இந்த குழந்தைக்கு வயது ஐந்தாகியும் பேசவில்லை அத்துடன் அது இருந்த மாதிரியிலும், ஜாடையிலும், முறையிலும் தெரியவில்லையா? ஊமைதான்.

நிச்சிந்தையாயிருந்தவர்களுக்கு இது ஒரு பெரிய விசாரம் வந்து குடி கொண்டது. ஊமைக் குழந்தைக்குப் புருஷன் அகப்படவேண்டுமே?' 'பெண் பிறந்தாலே கல்யாணக் கவலை என்ன வெட்கக்கேடு! ஆனால் ஊமையாய்ப் பிறந்த பெண்கள் என்ன' கன்யாஸ்திரீகளாயிருந்து விடுகிறார்களா? அது ஒன்றும் கிடையாது, பணத்தைப்பற்றிக் கவலையில்லாதபொழுது நல்ல இடமாகவே பெண்ணுக்குக் கிடைக்கலாம். ஆனால் கல்யாணமாகிப் பெண் வாழும்பொழுது அவள் கணவனோ மற்றவரோ அவள் கண் கசங்காமல், அவள் குறையைப் பொருட்படுத்தாமல் வைத்துக்கொள்ள வேண்டுமே': சுப்பலக்ஷ்மி அம்மாள் இந்தியாவில் அதிலும் தமிழ் நாட்டில் பிறந்துவிட்டு இந்தக்கவலை இல்லாமலிருக்க முடியுமா?

2

அப்பொழுது ஊமைச்சிக்கு வயது ஏழு. ராஜுவும் சின்னப்பையன்தான். பன்னிரண்டு வயது இருக்கும். கோடைகால விடுமுறை நாட்களைக் கழிக்கக் கிராமத்திற்கு மாமா வீட்டிற்கு வந்திருந்தான்.

சுப்பலக்ஷ்மி அம்மாளும் வேதராமய்யரும் அவனை அன்புடன் உழைத்து உபசரித்தார்கள். ராஜு புதிதாகத் தாய் தந்தையரைவிட்டு அயல் வீடு வந்ததால் சங்கோசப்பட்டுக்கொண்டு நின்றான்.

ஒரு சிறு பெண் குழந்தை கூடத்தில் ஆனந்தமாய் குதித்து விளையாடுவதை அவன் பார்த்தான். இவனைக் கண்டதும் அவள் விளையாட்டை நிறுத்தி இவனை நோக்கினாள். அவன் சங்கோசம் அதிகரித்தது

இதெல்லாம் வந்த தினத்தோடு முடிந்தது.

மறுநாள் ராஜு ஊமைச்சியுடன் தோட்டத்தில் சந்தோஷமாய் விளையாடியதைப் பார்த்தால் அவர்கள் பிறந்தது முதல் ஒன்றாயிருப்பவர்கள் என்று தோன்றும்.

'அம்மா சொன்னதுபோல் வேதமாமா பெண் ஊமைதான்' என்று ராஜுவுக்குத் தெரிந்தது. அவள் நுண்ணறிவு, அவனுக்கு ஆச்சர்யத்தை விளைவித்தது. பேசாமல், கேட்காமல் அவன் எண்ணங்களை அவள் எவ்வாறு அறிந்து கொள்கிறாள் என்றே அவனுக்கு விளங்கவில்லை. ஊமைச்சிக்குத் தனக்கு ஒரு தோழன் கிடைத்ததில் உண்டான சந்தோஷத்தைச் சொல்ல முடியாது

தினம் தினம் நாட்கள் எவ்வளவு போகின்றன என்று தெரியாமலேயே ராஜு சந்தோஷமாய்க் கழித்தான். விடுமுறை நாட்கள் வெகு வேகமாய் ஓடிப் போயின. ஊருக்குப் போவதற்கு முதல் நாள் ராஜு ஊமைச்சியோடு சுப்பலக்ஷ்மி அம்மாள் முன்னால் வந்து நின்றுகொண்டான். ஊமைச்சியின் இடுப்பில் ஒரு கையைப் போட்டுக்கொண்டான், 'ஊமைச்சியைத்தான் அம்மாமி நான் கலியாணம் செய்துகொள்ளப் போகிறேன். இப்பொழுதே சொல்லிவிட்டேன்' என்றான்.

'ஓ? ஊமைச்சிக்குத் தெரியவில்லையா? அவன் சொல்வதைக் கேட்டு லஜ்ஜைப்பட்டுக்கொண்டு தலை குனிந்தாள்.

அடா! ராஜுவின் தைரியத்தைப் பாருங்கள். கூசாமல் அவள் நெற்றியில் ஒரு முத்தமிட்டான்.

உள்ளங்குளிர்ந்தாள் சுப்பலக்ஷ்மி அம்மாள். இளமையில் ஜனித்த இவ்வன்பு மாறாமல் ஆயுள் முழுவதும் இருக்கவேண்டுமென்று பகவானை வேண்டிக்கொண்டாள்.

3

ஊமைச்சிக்கு வயது ஆகிவிட்டது. அவள் கலியாண விஷயமாய் வேதராமய்யர் ராஜுவின் தந்தை நடேசய்யரிடம் பேசினார்.

ஊமைச்சியை ராஜுவுக்கு கல்யாணம் பண்ணிக் கொள்வதில் காமாக்ஷி அம்மாளுக்கு இஷ்டமில்லை. நடேசய்யரிடம் அவள் பிரமாதமாகச் சண்டைக்கு ஆரம்பித்தாள் 'வேதம் என்னமோ விளையாட்டாய் பேசுகிறான். கல்யாணம் என்றால் என்ன. இன்றைக்கு செய்துவிட்டு நாளைக்கு மாற்றக்கூடிய விஷயமா? எனக்கிருப்பது ஒரு குழந்தை. அவனுக்கு போயும் போயும் ஊமைப் பெண்ணை கலியாணம் பண்ணத் துளி கூட சம்மதிக்கமாட்டேன்' என்றாள்.

'ஊமையோ' இல்லையோ கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவன் சம்மதிக்கும்பொழுது உனக்கென்ன? அவன் அல்லவா ஆட்சேபனை சொல்ல வேண்டும்' என்றார் நடேசய்யர்.

'அவனுக்கு என்ன தெரியும் சின்னப் பையன்? தெரியாமல் உளறுகிறான். நாளைக்கு நாலு பேர் உன் மாட்டுப் பெண்ணுக்கு என்ன பாடத்தெரியுமென்றால் நான் என்ன சொல்வது? ஊமையோடு அவனுக்குக் குத்தான் எத்தனை நாள் காலம்தள்ள முடியும்? என்று கேட்டாள் காமாக்ஷி அம்மாள்.

'உன்னைப்போல் வாயாடியாயிருப்பதற்கு, ஊமைச்சியாயிருப்பது மிகவும் நலம் உன் ஆட்சேபணைகளுக்குப் பதில் சொல்ல என்னால் முடியாது' என்று அந்தப் பேச்சை முடித்துவிட்டார் நடேசய்யர்

ஆனால் அடிமேல் அடிவைத்து அம்மியும் நகர்ந்தது.

4

வேதராமய்யர் வீட்டிற்கு நடேசய்யரும் காமாக்ஷி அம்மாளும் வந்திருந்தார்கள். ராஜு சுவரில் ஒரு காலை மடக்கி வைத்துக்கொண்டு, மற்றொரு காலால் நின்றுகொண்டிருந்தான்.

வேதராமய்யரும் நின்றுகொண்டிருந்தார்.

'ராஜுவுக்கு சம்மதம்தான் என்றால் எனக்கும் ஒரு ஆட்சேபணையுமில்லை. ஆனாலும் தெய்வ சம்மதம் எப்படியிருக்கிறதென்று பார்த்து விடுவோம்; இரண்டு சீட்டு எழுதி வேங்கடாசலபதி படத்துக்கு முன்னால் போடுவோம். 'கலியாணம் பண்ணலாம்' 'கலியாணம் வேண்டாம்' என்று இரண்டு எழுதிப் போடுவோம். எப்படி வருகிறதோ பார்ப்போம்' என்றார் நடேசய்யர்.

'சரி உங்கள் இஷ்டம் போலவே செய்வோம்' என்றார் வேதராமய்யர்.

'அடே ராஜு! நீதான் இரண்டு சீட்டு எழுதடா' என்றார். நடேசய்யர்.

ராஜு சற்று தயங்கினான். பிறகு காகிதம் பேனாவுடன் கீழே உட்கார்ந்தான்.

உமைச்சியின் உருவம் அவன் முன்னால் வந்து நின்றது புன்னகை பூத்தது. காதல் ததும்பும் கண்களைக் காட்டிற்று. உள்ளம் கலந்து ஒன்றாகிய பிறகு வேறு என்ன பரீட்சை வேண்டும்? காதலே கடவுள் சித்தம்தானே! பிறகு கடவுள் உத்தரவு ஏன்? என்று கையில் பிடித்த பேனாவுடன் ராஜு எண்ணமிட்டான்.

'ஏண்டா? எழுதேண்டா' என்று நடேசய்யரின் ஈனக் குரல் அவன் கனவைக் கலைத்தது.

பேசாமல் இரண்டு சீட்டை எழுதினான், மடித்து குலுக்கி பூஜைப் படத்தின் முன் போட்டான்.

நடேசய்யர் கொஞ்சம் விநோதப் பிரியர்.

'நீதான் அம்மா வந்து, இந்த இரண்டு சீட்டில் ஒன்றை எடு' என்று ஊமைச்சியை அழைத்துச் சொன்னார்.

ஊமைச்சி வெக்கத்துடனும் நாணத்துடனும் வந்தாள், சீட்டு ஒன்றை எடுத்து வேதராமய்யரிடம் கொடுத்து விட்டு வேகமாக உள்ளே சென்றாள்.

ராஜு மற்றொரு சீட்டை எடுத்தான். பிரித்துப் பார்த்தான். ,கலியாணம் பண்ணலாம்' என்று இருந்தது. அவ்வளவுடன் அவனுக்கு உலகமே அஸ்தமித்தது போலாய்விட்டது. ஏக்கம் பிடித்து ஒன்றும் தோன்றாமல் உட்கார்ந்துவிட்டான்.

வேதராமய்யர் ஊமைச்சி கொடுத்த சீட்டைப் பிரித்துப் பார்த்தார் 'மனம் போல மாங்கல்யம்' கலியாணம் பண்ணலாம்' என்று வந்திருக்கிறது' என்று சொல்லிச் சீட்டை நடேசய்யரிடம் கொடுத்தார்.

ராஜுவுக்குத் தூக்கி வாரிப்போட்டது அவன் தன்னையே நம்பவில்லை, நடேசய்யரும் சீட்டை மற்றொரு முறை உரக்கப் படித்துவிட்டுப் புன்னகைசெய்த போதுதான் அவனுக்கு நம்பிக்கை வந்தது இரண்டு சீட்டிலேயும் தான் ஒரே விதமாய் எழுதியிருக்க வேண்டுமென்று அவன் அறிந்துகொண்டான். தன் கையிலிருந்த சீட்டை வாயில் வைத்துக் கடித்து நசுக்கினான்.

'என்னடா? கலியாணம் என்றவுடன் கழுதையாய் விட்டாயா?' என்றார் நடேசய்யர்.

ஊமைச்சிக்கும் ராஜுவுக்கும் வெகு சம்பிரதாயமாக விவாகம் நடந்தேறியது.

5

மூன்று வருஷங்கள் கழித்து ஊமைச்சிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு ஒரு வயது ஆகும் வரையில் வெகு கவலையாயிருந்தான் ராஜு. ஒரு வருஷம் முடிந்தவுடன் குழந்தை தன் தாயை எல்லோரும் கூப்பிடுவது போலவே ஊமைச்சி'யென்று மழலைச் சொற்களால் கூப்பிட்ட பொழுது அவள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவு கிடையாது. ஊமைச்சிக்கு இதில் ஒன்றும் அதிசயமாய்த் தெரியவில்லை. ஆனால் அவனுக்குத் தெரியும் அதன் அருமை. ஊமைச்சியின் பெயர் உங்களுக்குத் தெரியுமா? அவள் பெயர் மதுரபாஷிணி. என்ன அபூர்வமான பெயராயிருக்கிறதே என்று நினைக்கிறீர்களா? அவளே அபூர்வமான பெண் தான். வேண்டுமானால் ராஜுவைக் கேட்டுப் பாருங்கள்.

சங்கக் கவிகளின் மொழி உணர்வு

சி. கனகசபாபதி

கவிஞர்களின் மொழி அவர்களே சொந்தமாகக் கண்டுபிடிக்கிறது இல்லை. வீட்டிலும் வெளியிலும் நாம் பேசுகிற மனிதமொழிதான் கவிஞர்களின் மொழி. ஆனால் மனிதப் பேச்சு மொழியை ஒரு கட்டமைப்புக்குள் கொண்டுவந்து அமைப்பது பொதுவாகக் காணப் பட்டாத அவர்களுடைய சிறப்பான தொழில். ஒரு கட்டு விட்ட நெகிழ்ந்த தொடர்ச்சி பேச்சுக்கு அதுபோல் வசனத்துக்கு ஒரு இயல்பாக இருக்கிறது என்றால் கவிதைக்கு ஒரு கட்டுவிடாத செறிந்த தொடர்ச்சி உண்டு. இன்னும் சொன்னால், பேச்சில் அதுபோல் எழுதும் எளிய வசனத்தில் பிடிப்பாக அமையாத படிமக் காட்சிகளின் விளைவுகளைக் கவிதையில் நாம் காண முடிகிறது

தமிழில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது சங்கக் கவிதை. சங்கக் கவிஞர்களின் மொழி எப்படிப் பட்டது என்று புதியதொரு பொது நோக்கில் ஒரு சில இயல்புகளைக் கண்டறிய முற்படுவதே இந்தக் கட்டுரையில் என் நோக்கம். அது மனிதமொழியாக அதே போல் படிமமொழியாக நம்முன் கதிரியக்கம் காட்டுகிற அழகைச் சுட்டிக்காட்ட இங்கு என் ஆசை. நரியைப் பரியாக்கின மாயம் உடைய கவிதைமொழி அது. சுலபத்தில் அவர்களுக்குக் கிடைத்திருக்கமுடியாது அது. அரும்பாடுபட்டே கைவந்திருக்கவேண்டும் அது.

மாலை நேரத்தை வருணிக்கும்போது நற்றிணையில் ஒரு பாட்டு,

> 'நெய்தல் கூம்ப நிழல் குணக்கு ஒழுகக்
> கல்சேர் மண்டிலம் சிவந்துநிலம் தணிய'
>
> (நற். 187)

என்று தொடங்குகிறது. மாலை என்ற சொல் வாரமல் அந்த நேரத்து நினைப்புவரப் படிமங்கள் துணையாகின்றன அந்தப் பாட்டு முழுவதிலும்.

அது ஒரு கடற்கரை நிலம். நெய்தல் செடியின் பூக்கள் குவிந்திருக்கின்றன. நிழல் கிழக்குப் பக்கம் மறையும்படி மலையைச் சென்றடையும் சூரியன் சிவந்து தோன்றி நிலத்தின் கீழே தாழ்ந்து போகிறான். சூரியனை மண்டிலம் என்னும் சொல்லால் குறிக்கிறார் கவிஞர். பெரிய வட்டவடிவமானது என்று மாலைச் சூரியனைக் கவிஞர் வருணிப்பது தெரிகிறது அப்போது நிழல் கிழக்கே மறைய என்று கவிஞர் சேர்த்துக் கூறுவதையும், கடற்கரை என்று காண நெய்தல் பூக்கள் குவிவதைக் கொண்டுவந்து காட்டுவதையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்,

கவிஞர் இங்கே ஒரு நடப்பியல் காட்சியைப் பேசும் மனிதமொழி துணையாகப் பாட எடுத்துக்கொண்டிருக்கிறார். மாலை நேரம், கடற்கரை ஓரம் என்று மொட்டையாகச் சொல்லுகிற மொழியின் பாதையில் அவர் நடந்து போகவில்லை. இதற்கு மாறாக, படிமக் காட்சியின் விளைவுகள் தோன்றவைக்கும் மொழியின் மாயச் சுழலுக்குள் அவர் அகப்பட்டிருக்கிறார் என்று தெரிகிறது. கவிதையின் உருவாக்கம் இப்படிப்பட்ட முதல் நிலையான படிமங்களால்தான் முடியும் என்று சங்கக் கவிஞர் உணர்ந்தவர் என்றும் தெரிகிறது.

வறண்ட ஒரு நிலப்பரப்பை 'நிழல் ஆன்று அவிந்த நீரில் ஆரிடை' என்று ஒரு சங்கக் கவிஞர் பாடியிருக்கிறார். குறுந்தொகையில் ஒரு பாட்டில் தொடக்க வரி இது. நிழல் சிறந்து அழிந்த நீரில்லாத வறண்ட இடம் என்பது இந்த வரிக்குப் பொருள். ஒரு சமயத்தில் நிழல் அங்கே சிறந்திருந்தது. இப்போது நிழலே இல்லாமல் அழிந்துபோயிருக்கிறது. இப்படிப் பொருள் செய்துகொண்டு இன்னும் விளங்கிக் கொள்ள எண்ணமிடுகிறோம். அந்த இடத்தில் முன்பு நிழல் கொடுக்கும் மரங்கள் இருந்தன. அம்மரங்கள் இப்போது இல்லாத ஒரே வறட்சி. இதுவே கவிஞர் உணர்த்த விரும்புவது. நிழலை வைத்துச் சொல்வதால் படிமத் தோற்றம் காட்டுவது ஆகிவிடுகிறது. 'மரங்களே அற்ற வறண்ட இடம்' என்று சொன்னால் மொட்டையாகச் சொல்வதாகிவிடும்.

2

> 'துஞ்சுவது போல இருளி விண்பக
> இமைப்பது போல மின்னி'

> 'மூத்தோர் அன்ன வெண்தலைப் புணரி
> இளையோர் ஆடும் வரிமனை சிதைக்கும்!'

இந்த வரிகள் இரண்டு பாட்டுக்களின் தொடக்க வரிகள். மழை பெய்வதற்கு முந்திய வானக்காட்சியைப் பாடினார் ஒரு சங்கக் கவிஞர். தூங்குவதுபோல இருண்டு, வானம் பிளவுபட இமைப்பதுபோல மின்னுகிறது. இதுதான் முதலிரண்டு வரிகளுக்குப்பொருள். ஒரு கடற்கரைக் காட்சியைத் தொடங்கிப் பாடினார் இன்னொரு சங்கக் கவிஞர். பெரியோர்களைப்போல வெள்ளையான தலையுடன் கடல் அலை தோன்றுகிறது. அக்கடல் அலை கடற்கரையில் சிறுவர்கள் கட்டி விளையாடும் மணல் வீட்டைச் சிதைக்கிறது. இதுவே இரண்டாவது இரண்டு வரிகளுக்குப் பொருள் கடற்கரையில் பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் ஒரு விளையாட்டுப்போல ஒரு காட்சியைப் புலப்படுத்துகிறார் கவிஞர்,

இங்கே நாம் பார்க்கும் வானக்காட்சியும் கடற்கரைக் காட்சியும் எப்படிப்பட்ட மொழியின் மூலம் வெளியீடு பெறுகின்றன என்று நாம் காணவேண்டும். உண்மையில் இது மனிதப் பேச்சு மொழிதான். ஆனால் ஒரு கட்டமைப்புக்குள் கட்டுவிடாத செறிந்த தொடர்ச்சியில் படிமமொழியாக இது உயர்ந்து விளங்குகிறது. முதல் நிலைப் படிமங்களை உருவாக்கினால்தான் கவிதைத் தன்மையை ஒரு பாட்டில் கொண்டுவர முடியும் என்று சங்கக் கவிஞர்கள் கவிதையைப் பற்றிய ஒரு நனவு கொண்டிருந்தவர்கள் என்பது இதனால் நமக்குப் புலப்படுகிற உண்மை.

தற்காலக் கவிதையில் இந்த முதல் நிலைப் படிமங்களுடன் பாடும் வகையைப் பற்றித் திறனாய்வாளர்

சொல்லிக்காட்ட மறப்பதில்லை. காரணம் இன்றைய நடப்பு வாழ்வு இயந்திர மயமாக மாறிவருவதால் கவிதைப் படைப்புக்கு வேண்டிய அழகுணர்ச்சியுள்ள ஒரு மாயத்தை உண்டாக்க அவர்கள் நினைப்பதுதான். படிமவியல் இயக்கத்தைத் துவக்கியவர்களில் ஒருவரான ஹியூம் தம் கட்டுரையில், 'கப்பல் கடல்களில் செல்கிறது' (The ship sailed the seas) என்று வருவதைக் காட்டிலும், 'கப்பல் கடல்களைத் துரத்திச் செல்கிறது' (The shio Coursed the seas) என்று 'கவிதையில் வருவதே சிறப்பு என்று சின்ன உதாரணம் கொடுத்து விளக்கியிருக்கிறார். திங்களை ஆட்சிக்குடை என்றும் ஞாயிற்றை ஆணைச் சக்கரம் என்றும் சிலப்பதிகாரத்தைத் துவங்கும் போதே இளங்கோ பாடியதில் சந்திர சூரியரைப் பற்றிய முதல் நிலைப் படிமங்கள் அழகுடன் தோன்றுகின்றன, அதே இளங்கோ காவிரி ஆறு மணிப்பூவாடை போர்த்து, கருங்கயல்கண் விழித்து நடப்பதாகவும் கற்பனை செய்துள்ளார். மயில்களை நடனம் ஆடும் பெண்கள் என்றும் தாமரைப் பூக்களை விளக்குகள் என்றும் கம்பன் தன் வருணனைப் பாட்டில் முதல்நிலைப் படிமங்களுடன் பாடியிருக்கிறான். 'தற்காலப் பாங்கின் முடிவு' என்னும் தமது புத்தகத்தில் ஜேம்ஸ் மெக்காலே, 'உயர்ந்த கவிதை இத்தகைய முதல் நிலைப் படிமங்களின் அடிப்படையின்மேல் நிலைபெற்றிருக்கிறது' என்று கூறுகிறார். மேலும் அவர், நன்மையும் தீமையும் ஒளியும் இருளும் போன்றவை எனவும், காலம் ஒரு நதி எனவும், வாழ்க்கை ஒரு பயணம் எனவும் சொல்லுகிற முதல்நிலைப் படிமங்களை உதாரணத்துக்குக் காட்டியிருக்கிறார்.

முதல் நிலைப் படிமங்கள் என்பவை இயற்கையானவை; அடிப்படையானவை; மேலும் பொதுவானவை. இந்த முதல்நிலைப் படிமங்களுடன் தொடங்கி ஒரு வாழ்வுக் கருத்தை அல்லது உணர்வை அழகுணர்ச்சியுடன் வெளியீடு செய்யும் ஒரு முறை கண்டவர்கள் நமது சங்கக் கவிஞர்கள். அவர்கள் பாடிய காதல் பாட்டுக்களில் போல வீரம், கொடை, பொதுவாழ்வு முதவிய புறப்பொருள்களைப் பாடும் பாட்டுக்களிலும் முதல் நிலைப்படிமங்களைக் கையாளும் தொழில் திறன் அமைந்திருக்கிறது.

'நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள்
முவரி மருங்கின் முதியோள் சிறுவன்'

(புறம். 278)

'சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி'......

(புறம். 86)

இந்த வரிகள் புறநானூற்றில் இரண்டு பாட்டுக்களின் முதல் வரிகள்.

ஒரு கிழவியைப் பற்றிய உடல் வருணனை முதலிரண்டு வரிகளில் இருக்கிறது. நரம்புகள் வெளியே தோன்றி வற்றிய, அழகும் தோற்றமும் குறைந்த மெல்லிய தோள்களை உடைய, தாமரை இலையின் அடிப் பாகத்தைப் போன்ற வயிற்றைக் கொண்ட கிழவியின் மகன் அச்சிறுவன். ஒரு சில சொற்களில் கிழவியைப் பற்றிய படிமம் தோன்றக் கவிஞர் பாடியுள்ளார். 'அவள் முதியவள்; அவளுக்கு ஒரு மகன்' என்று உணர்வுகளைத் தரும் படிமம் இல்லாமல் சொல்லியிருந்தால் ரசனையே பிறக்காது. கவிஞரின் சொற்கள் கிழவியின் முதல் நிலைப் படிமம் வரையத் துணையாகி நிற்பதை இப்பாட்டில் நாம் காணமுடிகிறது.

ஒரு தாயின் வீட்டுக்கு ஒருநாள் பக்கத்து வீட்டுப் பெண் வந்து 'உன் மகனை எங்கே?' என்று கேட்கிறாள். அதற்கு அந்தத் தாய் வந்த பெண்ணிடம் பதில் சொல்கிறாள். தாயின் பதிலாகவே பாட்டு ஆரம்பிக்கிறது. தன் மகன் போர்க்களத்தில் இருப்பான் என்று அந்தத் தாய் கூறும் பதிலைப்பற்றி இங்கு ஆய்வு செய்வது என் நோக்கமில்லை. 'சிற்றில் நற்றூண் பற்றி' என்று கவிஞர் தொடக்கத்தில் பாடியதைப் பற்றித்தான் ஆய்வு. வந்த பெண், தாயின் சின்ன வீட்டில் நல்ல தூணைக் கைகளில் பற்றி நின்றுகொண்டு தாயிடம் அவள் மகனைப்பற்றிக் கேட்டதாகக் கவிஞர் குறிப்பிடுவதைப் படிக்கும்போதே முதல்நிலைப் படிமத் தோற்றம் நம் மனத்தில் இலேசாக எழுகிறது. வெறுமனே 'வீட்டுக்கு வந்து' என்று சொல்லியிருந்தால் வரும் பேச்சு மொழித் தன்மையைக் காட்டிலும், 'சிற்றில் நற்றூண் பற்றி' என்று அமைப்பதில் படிம அழகு வெளிப்படுகிறது. வந்த பெண்ணின் தயக்கமும் கூட ஓரளவு இப்படிமத்தின் ஊடே தெரிகிறது.

3

இனிமேல், சங்ககால ஒரு முழுப்பாட்டை வைத்துக்கொண்டு படிமத்தின் முதல்நிலை அப்பாட்டில் எப்படி உருவாகிறது என்று குறித்துக்காட்ட விரும்புகிறேன். தற்காலக் கவிதைக்கு எது வேண்டிய அம்சம் என்று சொல்கிறார்களோ அது பழைய தமிழ்க் கவிதையில் ஒளியோடு காட்சிதருகிறது. இன்றைய ஒரு கவிஞன் மொழியை எப்படிப் பயன்படுத்தவேண்டும் என்று உணர்வதற்கு அவன் சங்கப் பாட்டுக்களிடத்தில் போகலாம்.

'பொன்என மலர்ந்த கொன்றை; மணி எனத்
தேம்படு காயா மலர்ந்த; தோன்றியொடு
நன்னலம் எய்தினை புறவே! நின்னைக்
காணிய வருதும் யாமே—
வாள்நுதல் அரிவையொடு ஆய்நலம் படர்ந்தே.'

(ஐங். 420)

இந்த ஐந்துவரிப் பாட்டில் சில மரங்களின் பெயர்கள், புறவு என்றும் சொல், அரிவை என்னும் சொல் ஆகியவை படித்தவுடன் மனத்துக்குப் படுகின்றன. புறவு என்றால் முல்லைக்காடு. அரிவை என்றால் பெண். 'முல்லைக்காடே! உன்னை என் காதலியோடு காணவருகிறேன்' என்று பாட்டில் காதலன் கூறுவதாக விளங்கிவிடுகிறது. பிரிந்து சென்றிருந்த அவன் குறித்த காலத்தில் திரும்பிவருகிறான் என்றும், அப்போது முல்லைக்காடு எங்குமே பூத்த மலர்க்காட்சியைப் பார்த்து அவன் உள்ளம் பூரித்துப் போகிறான் என்றும் மனத்துக்குப் பட்டுவிடுகிறது.

பிரிந்தவன் திரும்புகையில் அவனுடைய மகிழ்ச்சியான மனநிலை ஒன்றே பாட்டின் கதைக்கரு. இப்படி இதை ஒருவர் சொன்னால்தான் புரிகிறது என்று குறைப்பட்டுக்கொள்ள இடமில்லை என்று நினைக்கிறேன். கம்பன் பாட்டானாலும், நாயன்மார் ஆழ்வார் பாட்டானாலும், சித்தர் பாட்டானாலும் படித்தவுடனே என்ன புரிகிறது? எல்லாம் புரியுமா? கொஞ்சம் கொஞ்சமாகக் கதைக்கருவை முதலில் விளங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதன் மேல் பாட்டின் உயிர்

மூச்சு மனத்தில் வீசுகிறது. நம் காலத்தில் இராமலிங்கர், பாரதி, பிச்சமூர்த்தி பாட்டாலும் இருள் மங்கவின் ஊடே படிப்படியாகவே ஒளிவீச்சைத் தருகிறது.

இப்பாட்டின் கதைக்கருவுக்கு எளிய சின்னஞ்சிறு காட்சிப் படிமங்கள் துணையாகின்றன. கொன்றை மரங்கள் பொன்போல மலர்ந்தன. காயா மரங்கள் நீலமணிபோல மலர்ந்தன. தோன்றி மரங்களோடு நல்ல அழகு பெற்றிருக்கிறது முல்லைக்காடு. இந்த மரங்களைப் பற்றிய முதல் நிலைப்படிமங்கள் தோன்றவைக்கும் ஒரு நனவுடன் கவிஞர் பாடியிருப்பதாகத் தெரிகிறது. அந்த முல்லைக்காடு காதலன் கண்ணுக்கும் கருத்துக்கும் அழகே உருவாகத் தோன்றுகிறது. காரணம் காதலியை இதோ பார்த்துவிடலாம் என்னும் நம்பிக்கை ஒளி அவனுக்கு. தன் காதலியைப் பார்க்க வந்துகொண்டிருப்பவன் அவளைப் பார்ப்பது தன் முதல் ஆவல் என்பதையும் விட்டுவிட்டு, அந்த முல்லைக் காட்டைப் பார்த்தவுடன் அதையே முதலில் கூப்பிட்டுச் சொல்லிவிடுகிறான். முல்லைக்காடு பற்றி முதல்நிலைப் படிமம் படைத்துக்காட்டும் சோதனைத் திறத்தில் இப்பாட்டைப் பாடிய சங்கக் கவிஞர் வெற்றி காண்கிறார் என்றே கூறவேண்டும்.

கவிஞர்கள் உணரவேண்டிய இந்தச் சோதனை சாதாரணமானது அல்ல. மனிதப் பேச்சு மொழியைப் படிமமொழியாக வரைந்து காட்டத் தெரிந்தால்தான் இதில் எந்தக் கவிஞரும் தேர்ந்தவராக முடியும். சங்கப் பாட்டுக்களில்கூட ஒரு சில இந்த முதல் நிலைப் படிமங்கள் இல்லாமல் காட்சியளிப்பது மெய்தான்.

4

படிமத்தின் அடுத்த இரண்டாவது நிலை பற்றியும் இனிச் சொல்லி, கவிஞர்கள் தம் மொழியில் சொர்க்கத்தைப் படைப்பது எவ்வளவு கடினமான கலை என்றும், புலன்காட்சி தீவிரமாக இருந்தால்தான் இதில் நீந்திக் கரையேற முடியும் என்றும் குறிப்பிட எண்ணுகிறேன்.

'எல்லை கழிய முல்லை மலர
கதிர்சினம் தணிந்த கையறு மாலை,
உயிர்வரம் பாக நீந்தினம் ஆயின்
எவன்கொல் வாழி! தோழி!
கங்குல் வெள்ளம் கடலினும பெரிதே.'
(குறுந். 387)

இந்த ஐந்துவரிப் பாட்டைப் படித்ததும் முதல் வாசிப்பில், மாலை நேரம், பிரிவுக்காலம், தோழியிடம் ஒரு பெண் பேசிக்கொண்டிருக்கிறாள்; பிரிவாற்றாத துயரம் என்று விளங்கிக்கொள்கிறோம். இன்றைக்கு நினைத்தாலும் எளிய சொற்கள் இப்பாட்டில் கலந்துவருகிறதை, எளிமையின் வீச்சுக்குள்ளே ஒரு மாயச் சுழல் சுற்றுகிறதை காணமுடிகிறது

மாலைப்பொழுது என்றால் வெறும் மாலை என்ற சொல்லாலே குறிப்பிடப்படும்படி இல்லை. பகல் கழிகிறது. முல்லைப்பூ மலர்கிறது. கதிரவனின் கோபம் குறைந்துபோன மாலை. மேலும் ஒரு செயலும் செய்ய முடியாத மாலைநேரமாக இருக்கிறது. முதலிரண்டு வரிகளுக்குப் பதப்பொருள் இது, பொருளைச் சொல்லி விட்டால் பாட்டு அனுபவ நிறைவு அடைந்துவிடாது. பதவுரை அளவில் பதவுரைக்கு ஒரு குறிப்புரை அளவில் பாட்டுக்கு உறைபோட்டு மூடி, அனுபவக் கதவையும் சாத்திவைத்தால், அது போதவே போதாது.

முதல் வரியை விட்டுவிட்டு, 'கதிர்சினம் தணிந்த கையறு மாலை' என்ற இரண்டாவது வரியை மட்டும் மீண்டும் சொல்லிப் பார்த்தால், மனக்கண்ணில் அதன் காட்சிப்பதிவை வாங்கினால், மாலைக் கதிரவனைப் பற்றிய இலேசான முதல் நிலைப்படிமம் உண்டாகியிருப்பது தெரியும். சும்மாவாவது 'சூரியன் மறைந்த மாலை' என்று சொன்னால் வெறும் பேச்சு மொழிதான். கவிஞர் 'கதிர்சினம் தணிந்த கையறு மாலை' என்றல்லவா சொல்கிறார்? 'சினம் என்பது மாலைச்சூரியனின் சிவந்த நிறத்தைக் குறிப்பிடும்படியாக ஆகிறது. கவிஞர் சிவப்புக்குப் பதில் சினம் என்று அமைத்து இவ்வரியில் அழகான ஆனாலும் இலேசான பொதுவான முதல்நிலைப் படிமத்தை உருவாக்கியுள்ளார். கவிதையின் தொடக்கத்திலேயே படிமமொழியில் இக்கவிஞர் பேசுவது புலப்படுகிறது.

முதலிரண்டு வரிகள் ஒரு புறநிலைக் காட்சியைக் கண்களுக்குமுன் கொண்டுவருகின்றன என்றால் கடைசி மூன்று வரிகளும் புறநிலையிலிருந்து கொஞ்சம் திரும்பி அகநிலையின் ஊற்றுக்கண் ஆழத்தை முகந்து வருகின்றன.

காதலனைப் பிரிந்திருக்கிற இவள் மாலை நேரத்தைக் கடந்துவிடத் துடிக்கிறாள். ஆனால் இரவைக் கடப்பதென்பது முடியாத காரியம்.

'உயிரே எல்லையாக நீந்தினால் அதற்குமேல் வரும் இரவின் வெள்ளம் கடலைக் காட்டிலும் பெரியதாக இருக்குமே! இந்த மாலை நேரத்தைக் கடப்பதால் என்ன பலன்?'

இந்தக் கருத்தையே கவிஞர் அந்த மூன்று வரிகளில் உணர்ச்சிப்பாங்காக ஒரு கட்டமைப்புக்குள் படைக்கிறார்.

'உயிர்வரம் பாக நீந்தினம் ஆயின்
எவன்கொல் வாழி! தோழி!
கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே.'

இரவை வெள்ளம் என்றது ஒரு அழகான புதுமையான உருவகம். அந்த இரவு வெள்ளம் கடலைக்காட்டிலும் பெரியதாக இருப்பதால் நீந்திக்கடக்க முடியுமா? பிரிவாற்றாத துயரமனத்துக்கு இப்படித் தோன்றுவது இயற்கை. கவிஞர் நடப்பியலைவிட்டுப் பிசகாமல், படிமவியலில் மொழியைச் சிற்பம் செதுக்கிச் சீர்செய்து பாடியிருக்கிறார் என்று நன்றாக விளங்குகிறது.

முதலில் வந்துள்ள மாலையைப் பற்றிய படிமத்தைக் காட்டிலும் இரவைப் பற்றிய படிமம் அசாதாரணமாக வந்து விழுந்துள்ளது. 'தவிர்க்கமுடியாமை' என்னும் அழகுடனும் திகழ்கிறது. இதை மனவுலகில் கண்டு சொற்களில் எழுதுவதற்கு ஒரு புலன்காட்சி பெற்றால்தான் முடியும். இந்தமாதிரியான படிமமே 'வழிநிலைப் படிமம்' என்று குறிப்பிடப்படுகிறது. இதைக் கண்டு பாடிய கவிஞரின் தொழில் திறனை உணர்ந்துதான் 'கங்குல் வெள்ளத்தார்' என்று இவருக்குப் பெயர் சூட்டினார்கள் தமிழ்மக்கள்.

இவ்வளவும் கவிஞர்களின் மொழியைப் பற்றியதாக, கவிஞர்களின் சமுதாய உணர்வு பற்றியே எடுத்துச் சொல்லாமல், ஒரு உருவவியல் வாதம் போலத் தெரியும்படி எழுதிவந்த நோக்கத்தை முடிவில் கூறி

விடுகிறேன். இன்று நம்மிடையே சமுதாய உணர்வு என்று கொண்டு மொழியின் திசைப்போக்கைப் படிமம் காட்டும் அழகின் பக்கம் திருப்பாமல், சக்கையாக வற்ற வைக்கிற ஒரு (முற்) போக்கு நம் முன் நிழலாடுகிறது. சினிமா, வியாபார விளம்பர உத்திகளில் மனப்பழக்கம் செலுத்தி, எழுதுவதை ஒரே விளம்பர ஆலாரிப்பாகச் செய்துவருகிற, மேலும் சமுதாய நனவைத் திரித்து இலக்கியக்கனவைப் பழித்துவருகிற ஒரு (பிற்) போக்கு நம்முன் உலாவருகிறது. எனவேதான் படிமம் காட்டும் அழகை உண்டாக்கும் சொற்கள் உள்ள மொழியில் சோதனையை, நிகழ்கால வீச்சை, தொழில்திறனை அறியவேண்டியது அவசியம் என்று இன்றைக்குப் படுகிறது.

நிகழ்வாழ்வு கவிதைப் படைப்பில் வராமல் போகாது. அதைக்கொண்டு வராமல் இருக்கமுடியாது. படைப்பான கவிதையும் அழகைச் சார்ந்தே இருப்பது அதன் இயற்கை. எண்ணத்தின் உயர்பெருமையும் நல்ல உணர்வின் துல்லியமும் ஒருவருக்கு இருக்கலாம். அவர் எண்ணும்போதே அழகான எண்ணங்களை உணர்வு மிகுதியுடன் எண்ணலாம். இவை எல்லாம் இருந்தும் தொழில்திறன் இல்லாவிட்டால் கலைப்பிறப்பே நடக்காது. சங்கக் கவிதை மொழியில் தொழில் திறனை இன்றுவரையும் நமக்கு உணர்த்துகிறது.

கலீல் கிப்ரான்:

காட்சி

(தமிழில்: நா. வெங்கட்ராமன்)

பச்சை வயலிடை பளிங்கென் ஓடிய
அச்சிறு ஓடை; ஆங்கதன் கரையில்

நேர்பட நிபுணன் நிருமித் திருந்த
ஓர்பற் வைக்கூண் டிருப்பது கண்டேன்.

பூச்சரச் சருகாய் பொற்கூண் டதனுள்
மூச்சுநின் றோர்புள் மூலையில் கிடந்தது.

மற்றொரு மூலையில் நெல்லும் நீரும்
வற்றிக் கிடந்த வட்டகை யிரண்டு.

மூச்சில் பறவையும் முனுக்கும் நீரும்
பேச்சற எனைச்செய பணிந்து வணங்கினன்.

மனம், மனச் சாட்சி இவற்றின் சோதனைக்
கினியதித் தருணம் என நான் நின்றேன்.

'பூட்டப் பட்டுதன் பொக்கிஷ அறையில்
ஈட்டிய பொற்குவி யல்களுக் கிடையொரு

செல்வன் பசியால் சாதலுக் கொப்ப
தெள்ளோ டைக்கரை தாகத் தாலும்

வாழ்க்கையின் தொட்டிலாம் வளவயல் நடுவே
நீள்பசி யாலும் நொந்து மெலிந்து

இரங்கத் தக்க இச்சிற் றுயிரும்
இறந்திருக் கும்மென எண்ணிய துள்ளம்.

பார்த்திடும் பொழுதே பளிச்செனக் கூண்டு
மாற்றுருக் கொண்டொரு மனிதனின் எலும்புக்

கூண்டா யிற்றதற் குள்ளே கிடந்த
மீண்ட பறவையும் மாறி ஆங்கவன்

இதய மாயிற்று. இடர்ப்படும் பெண்ணின்
இதழ்களைப் போன்றவ் விதயத் தின்மேல்

புண்ணொன் றிருந்து பொழிந்தது உதிரம்,
புண்ணில் இருந்து பேசியதோர் குரல்:

'மனிதஇ தயம்நான் மாயையின் கைதி.
சினக்கும்உன் விதிகளின் பலிக்கடா நானே.

இறைவனின் அழகெனும் இன்வயல் நடுவே
விரைந்திடும் வாழ்வெனும் ஓடையின் விளிம்பில்

மனிதனின் சட்டம் எனுஞ்சிறைப் பட்டேன்.
கனிவுடன் கடவுள் கொடுத்தநற் பரிசை

சுகிப்பதி லிருந்து தடுத்தனர் என்னை.
ஜெகத்தினி லெங்கும் செழித்துப் பெருகி

காந்தமாய்க் கவரும் படைப்புகள் நடுவே
சீந்துவா ரின்றி செத்தேன் சிறையில்.

அன்பினை, ஆசையை என்னுள் தூண்டும்
எந்தநற் பொருளும் இவர்க்கிங் கிழிவாம்

நான்பெற ஏங்கும் நற்பொருள் யாவும்
ஆங்கவர் நீதியில் அழித்தகு பொருளாம்.

கருணையில் மனிதரின் கடுவெஞ் சிறையில்
இருள்நில வறையில், இக ஆட்சியெனும்

இரும்புத் தளையில் இறுகிக் கிடந்தேன்.
மறந்தனர் எள்ளிடும் மாந்தர் என்னை.

ஊனக் கண்ணீர் வறண்டு நாவும்
மோனத் திருக்க மூச்சை யிழந்தேன்.'

வரவரக் குறைந்த உதிரப் பெருக்குடன்
குரலும் மெதுவாய் குன்றி மெலிந்திட

இன்னமும் ஏதோ இதயம் சொன்னது.
கண்ணீர் பெருகியக் காட்சி மறைக்கவென்

ஜீவனின் ஓலம் செவிகளை அடைக்க
யாவதும் செய்திட இயலாது நின்றேன்.

ஏழு கதைகள்

தர்மு சிவராமு

உச்சி

முள் வேலியில் முளைக்கும் கசப்புக் காய்களின் ருசி தான் அவனுக்கு. அதுவும் அமிர்தமாக. அவனுக்கு அந்த சின்ன சுற்றுவேலிதான் தெரியும். அதுக்குள் வெகு காலமாக வாழ்ந்துவந்தான். ஒருநாள் குடிசைக்குள் அவன் பாட்டி விட்டுப்போன ஒரு மரவிதை கிடைத்தது அதை வேலிக்குள் நட்டுத் தண்ணீர் வார்த்து வளர்த்தான். மரம் பழுக்கும் என்று நினைப்பு.

வேலிக்கு அப்பால் போக அவனுக்குப் பயம் ஆனால் ஆசையும். அதோடு முள்ளுவேலியைப் பிரிக்க வேணுமே. அப்பால் என்னென்ன மரங்கள் நிறைந்து கிடந்தனவோ! அங்கெல்லாம் என்ன பழங்களோ, பூவோ!

அவன் நட்ட மரத்தில் என்னவோ பழமும் இல்லை பூவும் இல்லை. ஆனால் மரம் விருவிரு வென்று செங்குத்தாக வானத்தை தொடப்போற மாதிரி வளர்ந்து போனது. தன்னையும் கூட்டிப் போகுமே உசர. தனக்கு இந்த வேலிக்கப்பால் பார்க்க ஆசை இல்லையா என்று அவனுக்குத் தோன்றிற்று. 'ஆசை இல்லியாவாவது' என்று மரத்தில் ஏறினான் உச்சியில் உட்கார்ந்துகொண்டான். மரமும் அவனைத் தாங்கி வளர்ந்துகொண்டே போனது.

வேலியை மீறி அவனது பார்வை எழும்பிய உடனேயே 'ஹா, எவ்வளவு உசர வளர்கிறேன்!' என்று நினைத்துக்கொண்டான்.

'நீயா வளர்கிறாய்? நான்டா!' என்று மரம் குமுறி அவனை ஒரு உலுப்பு உலுப்பின மாதிரி இருந்தது.

தன்னைப் பிளந்து. மரத்தைத் தன் மடியிலிருந்து மேலே கக்கிக் கொண்டிருந்த விதை வாய்விட்டு மரத்தின் உள்த் தண்டில் பேசுகிறது; ,உன்னை இந்த மரத்தின் உச்சியில் வைத்து சுற்று வெளியைக் காட்டத் தான் இவ்வளவு நாள் காத்திருந்தேன். எனக்கு உன் பாட்டி வச்ச வேலை அது. பார்! இதுதான் அவள் உனக்கு வச்சது.'

அவன் சுற்றிப் பார்த்தான். மரம் உயர, உயர, வட்டமாக வேலிக்கப்பால் விரிந்து செல்லும் நந்தவனம் ஒன்று பச்சைப்பசேலென்று பூவும் பழமுமாக...அப்பால் பொன் வெளியான வயல்கள்...

'இதெல்லாம் எனக்கு, எனக்கு' என்று உற்சாகத்தில் துள்ளினான் மரக்கிளையிலேயே நின்றபடி.

'இன்னும் இல்லை. கீழே இறங்கி உன் வேலியைப் பிரித்து விட்டால்தான்' என்றது விதை. அவன் குனிந்து கீழே பார்த்தான். அடிமரம் வேலியின் நடுவே நிற்கிறது.

'ஐய! கறுப்புக் கோடு மாதிரி, உள்ளங்கையளவு சின்ன வேலி.'

'இறங்கிப் பிரி' என்றது. விதை. 'நான் இன்னும் கொஞ்ச நேரம்தான் மரத்தில் உசிரை வைத்திருப்பேன், சீக்கிரம்.'

அவன் இறங்கத் துவங்கினான். இறங்க இறங்க சுற்று வெளியும் சோலையும் சுருங்கி வந்தது. ஆனால் வேலி தன் முள்ளுச் செடிகளோடு கோரமாக வளர்ந்து வருகிறது. அதன் ஒவ்வொரு முள்ளும் அப்போதான் ஒவ்வொரு தேள்க் கொடுக்காகத் தோன்றிற்று. 'இல்லை. இல்லை, நான் என் சோலைக்குப் போகப் போறேன்' என்று நடுங்கியபடி மீண்டும் குரங்காகத் தாவி மேலே ஏறினான். உச்சிக்கு கீழே பார்க்கவே நடுக்கம்... உச்சிக்கு ..

விதை எப்பவோ மரத்தில் ஓடிய தன் ஜீவனை உள் வாங்கி மௌனமாகிவிட்டது

அவன் உச்சிக்கு ஏறவும், உயிரற்ற கோது மரக்கிளை 'நறுக்' கென்று முறிந்தது.

உள்ளங்கையளவு வேலி குபீலென்று விரிந்து தன்னை விழுங்க வருவதைத் தலைகீழே விழுகையில் கண்டான். அவன் கண்கள் மூடுமுன் தலை நிலத்தில் மோதி நொறுங்கியது.

வேலிக்குள் பேச்சு மூச்சற்ற இருள்.

மழை

எல்லையற்ற வெளித்த சமுத்திரத்திற்கு ஒரு முகில் பிறந்து வானத்தில்போய் மிருதுவாக விழுந்தது. காற்று முகிலைத் தொட்டுத் தாங்கிக் கொண்டது. முகிலின் பஞ்ச ஒளியுடம்பு காற்றின் மனசைத் தட்டிற்று. அதன் மனசில் எப்பவும் நிலையற்று ஊசலாடும் ஆசை எழுந்து உடல் முழுதையும் சுழற்றியது. அவ்வளவு தான். கையாலாகாத சமுத்திரம் என்ன பண்ணப் போகிறது' என்று முகிலைக்கொண்டு ஓடிவிட்டது.

காற்றின் மனைவி அன்றிரவு ஜில்லென்று தூரத்து மலைத் தொடர்களிலிருந்து எழுந்து கடலை நோக்கிவந்தாள். கடலின் இரவு வெம்மையில் சரிந்து கிடந்தவள் தன்னை மறந்து தூங்கிவிட்டாள். அவளுக்கு அன்று பகல் நடந்த விஷயம் தெரியாது. ஓய்வற்று மௌன முணுமுணுப்பிலேயே கிடக்கும் சமுத்திரம் சொல்லவில்லை. அது சொல்வதுமில்லை

பொழுது விடிகையில் கண்விழித்துப் புரண்டவள் திகைத்து எழும்பினாள். வான ஓரத்தில் இரண்டு சிவந்த கோர ரூபங்கள். ஒன்று பிரம்மாண்ட முதலையாக மற்றதைக் கவ்வுவதுக்கு நகர்ந்தது. ரத்தம் வடிகிற தசைப் பிண்டங்களின் தாறுமாறான உருவங்கள் ஒன்றை ஒன்று கிழித்து எறிய சுற்றி வந்தன. அவள் உடனே ஊகித்துக்கொண்டாள்.

பழையபடி தன் புருஷன் துவங்கிவிட்டானா? பிறந்தை குழந்தை முகில்களை எங்காவது அள்ளிக் கொண்டுபோய் வைத்து அவன் கற்பழிக்கிற கோரம் அவளுக்குத் தெரியும். முகில் திடீரென நேர்ந்த காமானுபவத்தில் திகைத்துக் கிழண்டு இருண்டுவிட்டது. ஒற்றை முகில், காற்றின் பிசாசுத் தனத்தினால் பிய்ந்து, மனக்கோளாறில் ஒன்றை ஒன்று விரோதிக்கும் வேறு வேறு தசைத் துண்டுகளாய் விட்டது. எங்கும் ரத்தம்.

அவள் தன் புருஷனைச் சபித்தபடி அந்த உருவங்களைத் தழுவி ஒன்றிக்க ஓடினாள்.

முகில்கள் இருண்ட குரூரத்தோடு ஒன்றை ஒன்று தாக்க நெருங்கின.

அவளின் முந்தானையில் திடீரென்று தீப்பிடித்து மறைந்தது. உடலை ஊடுருவிப் பாய்ந்தது ஒரு முகில்

நீட்டின செருப்பு நகம். அவள் அதன் இடிக் குரல் அழைப்பில் நடுங்கினாள். உடம்பு பயத்தில் ஜில்லிட்டது. சோர்ந்துவிட்டாள்.

கண்ணை விழித்தபோது வெறும் வெளிச்சம்தான் இருந்தது.

நீண்ட பெருமூச்சாக மலைக்காட்டுக்குள் போய் விழுந்து 'ஹோ' வென்று அழத்துவங்கிவிட்டாள்.

சமுத்திரத்தில் வெறும் மௌன முணு முணுப்பு. அதுக்கு ஏதும் வரவில்லை—இழப்பும் இல்லை.

அதை அது சொல்லவில்லை சொல்வதுமில்லை.

சிலேட்

முழுசாக இருந்த சிலேட் ஒன்று விழுந்து உடைந்து விட்டது.

சிதறின துண்டுகள் ஒன்றுக்கொன்று சண்டை போட்டன. 'யாரு சிலேட்' நான்தான் சிலேட்!' என்றது ஒன்று.

'முகறையைப் பார்! சிலேட்டாம் சிலேட்' என்று மற்றது பரிகாசம் பண்ணியது. சிலேட்சட்டத்திலிருந்து விழாது நின்ற ஒரு பெரிய துண்டு மட்டும், 'உஷ், யாரங்கே சிலேட் துண்டுகளுக்குள் என்ன 'சண்டை?' என்றது.

'சிலேட் துண்டுகளுக்குள்ளா? எல்லாருமே சிலேட் துண்டுதானா? என்ன ஓய்! அந்தச் சுவரையும் சிலேட் என்று சொல்லுமேன். கொஞ்சம் வாட்ட சாட்டமாக இருந்தாப்போல் உம்ம உளறலை நம்ப வேணுமோ? நான் மட்டும்தான் இங்கே சிலேட். என் நெஞ்சைப் பார். எழுத்தெல்லாம் இருக்கு.' என்றது முதல் துண்டு.

பெரிய துண்டு, 'உன் நெஞ்சு எழுத்தைத்தானே பார்க்கிறாய். அதை வசனமாக பார்த்தாயானால்தானே தெரியும். அதன் தொடர் என் நெஞ்சிலும் இருக்கு அவன் நெஞ்சிலும் இருக்கே' என்றது.

'நீயும் உன் தத்துவமும்' பாய்ந்தது முதல் துண்டு.

பெரிய அகலமான துண்டு அந்தப் பாய்ச்சலுக்குப் பயந்துவிட்டது. ஏனென்றால் மற்றத் துண்டுகளுக்கு இல்லாத ஒரு கூரான முனை கத்தி மாதிரி அந்த முதல் துண்டுக்கு இருந்தது. 'அந்த கூர்முனைகூட விழுந்து உடைந்ததால் ஏற்பட்டதுதானே. அதுவும் நீயும் நானும் அவனும் எல்லாமே ஒன்றாயிருக்கையில் அதுவும் இல்லை; நீ நான் அவனும் இல்லையே. இந்தச் சட்டத்தில் சிலேட் ஒன்றுதானே இருந்தது' என்றது பணிவோடு. கத்தித் துண்டுக்குப் பேசி மினக்கெடப் பொறுமை இல்லை. பெரிய துண்டு ஏமாந்த சமயம், தாக்கும் பாவனையில் பாய்ந்தது. ஆனால் தாக்கினால் அதுதான் உடையும். சட்டத்தில் நின்றிருந்தால் பெரிய துண்டை அந்தப் பாய்ச்சலும் ஒன்றும் செய்திராது.

ஆனால் பயத்தில் பெரிய துண்டு சட்டத்தை விட்டுத் தடுமாறியது—விழுந்தது.—உடனே ஒரு கதறலோடு இரண்டாகப் பிளந்தது. இரண்டு புதுத் துண்டுகளும் ஒன்றை ஒன்று கண்டன. 'என்னடா? யாரென்று பார்க்கிறாய்? நான்தான் இங்கே சிலேட்' என்று துவங்கிவிட்டன.

கத்தித் துண்டு சிரித்தது.

இவ்வளவுக்கும் சிதறின சிலேட் ஒன்றாயிருக்கையில் அதைச் சுற்றித் தழுவியிருந்த சதுரச் சட்டம் தூர நின்றது. அதன் சதுரவெளியில் மௌனம்.

நதி

வரட்டுப் பாறை உலகில் ஒருநாள் ஒரு குன்று பிளந்தது. கருப்புக் கற்களைக் கிழித்துக்கொண்டே ஜில்'லென்று, வெளிச்சப் பருத்தியாக ஒரு அருவி பிறந்துவிட்டது. தண்ணீரே படாமல் அழுக்குப்பிடித்த ஒருத்தன் கண்டான். ஓடிப்போய், நிலத்திற்குத் தண்ணீர் இறங்கு முன்பே குடங்களுடன் வந்துவிட்டான். ஒவ்வொரு பாத்திரமாகப் பிடித்துப் பிடித்து ஒன்றின் மேல் ஒன்றாய் அடுக்குகிறான், ஒரு சொட்டும் வீணாகாமல்.

அவனின் பெண்சாதி அருவியைத் தூரத்தில் கண்டு ஆசையோடு குழந்தையையும் இழுத்துக் கொண்டே ஓடிவந்தாள். கணவன் சீரியஸாகச் செய்கிற காரியத்தைக் கண்டு தயங்கி நின்றாள்.

'பொறு; பொறு. தண்ணி முழுக்க புடிச்சுவைப்போம். பிறகு வேண்டின மாதிரி குளிக்கலாம்.' என்றான் கணவன்.

அவளுக்கு அப்பவே உயிரோடு வரும் அருவியில் குளிக்கத்தான் ஆசை. குடத்துக்குள் உயிரற்றுக் கிடக்கும் தண்ணீரில் என்ன சுவாரஸ்யம்?

குழந்தைக்கு அப்பா சொன்ன ஞாயம் புரியுமா? தத்தி நடந்துபோய் அடுக்கான குடங்களை தள்ளி விழுத்தினான். அப்பன் திகைத்து நின்றான்.

குடங்கள் பிணங்களாய் உருண்டன. தண்ணீர் உயிர்பெற்று உருண்டது.

குழந்தையும் அருவியும் சிரித்தார்கள்.

அருவி குழந்தையின் தலையில் விழுந்து தழுவி ஓடியது. ஓய்வற்று.

ஊற்று

இரண்டுபேர் தங்கள் காணிகளில் ஆளுக்கு ஒவ்வொரு கிணறு வெட்டினார்கள். இடையில் ஒரு வெள்ளம் வந்தது. பாதியில் நிறுத்திவிட்டு வெள்ளம் வடிந்ததும் வந்து பார்த்தார்கள்.

இரண்டுபேர் வெட்டிய குழிகளிலும் தண்ணீர் நின்றது. முதல் ஆள், 'ஆஹா, என் கிணற்றில் தண்ணீர் வந்துவிட்டது.' என்று அதைச் சுற்றிச் சிமிந்தியால் கட்டினான். வாளி போட்டு அள்ளவும் ஆரம்பித்தான்.

மற்றவன் முதல் வேலையாக தான் வெட்டின குழியிலிருந்த நீரை வெளியே இறைத்தான். தொடர்ந்து மீண்டும் வெட்டத் துவங்கினான்...ஆழத்துக்கு... இன்னும் ஆழத்துக்கு...

முதல் ஆள் வேலியில் நின்று இவனைக் கூப்பிட்டு விசாரித்தான். பதில் இல்லை, ஒரு இருண்டு ஆழ்ந்த குழிதான் பார்வையில் விழுந்தது.

'கிணறையும் காணோம். ஆசாமியையும் காணோம்' என்று தன் சேற்றுக் குழிக்குத் திரும்பினான் பெருமையோடு.

தவசி

நடுக்கடலில் இருண்ட பாறை ஒன்று அசைவற்று உட்கார்ந்திருந்தது.

பெண்களின் வரிசை மாதிரி முத்து நுரைகளைச் சுமந்தபடி அலைகள் நகர்ந்துகொண்டே இருந்தன. ஒரே அலைக் குரல்கள்.

இருந்தாப் போலிருந்து பாறையருகே, கடல் பரப்பைக் கிழித்துக்கொண்டு மேலே துள்ளி எழும்பி வெளிச்சத் துண்டாக மின்னிற்று ஒரு மீன்.

பாறை சற்றே நிமிர்ந்து பார்த்தது. மீன் வியப் போடு அந்தரத்தில் நின்று தன்னைப் பார்ப்பதைக் கண் டது. அந்தப் பார்வையில் ஏதோ கேள்வி?

பதிலாக, பாறை, கடலைநோக்கிச் செங்குத்தாக இறங்கும் மீனுக்குக் கேட்க சடபடவென்று பேசி முடித் தது; 'கடல் அரற்றிக்கொண்டே இப்படி ஓடுதே எங் கேயோ, எப்ப ஓடித் தொலையுது என்று பார்க்கிறேன். இது தொலைந்த பிறகாவது கொஞ்சம் சாந்தி கிட் டரதா?'

மீன் அலையும் பரப்பைக் கிழித்து உள்ளே புகுந்து விட்டது.

அடியில் என்ன கம்பீர மௌனம் நிச்சலனம்!

நூல்

ஊருக்குள் வரும்போது அவளுக்குப் பிரக்ஞை இல்லை. பிரசவ வார்:ட் கட்டிலில் கண்ணை விழித்தாள அண்ணாந்தபடி,

'குப்'பென்று துணிவாடை – புத்தம் புதுத் துணி வாடைதான் அடித்தது. உயர்ந்த அலங்காரமான கூரை. வகை வகையான சேலைகள் மேலே அடுக்கி இருக்கிறது. அந்தரத்தில் வர்ண முகில்கள்போல் துணிகளைத் தாறுமாறாகக் கட்டிவிட்டிருக்கிறார்கள். மயில் தோணிபோல் ஒன்று பளபளத்துக் கொண்டிருந்தால், அதன் டிசைன் விசித்திரத்தில் கண்கள் சலித்துவிடா மல் வெண்பட்டுத்துணி அருகே காற்றில் துடித்துப் பார்வையை இழுக்கும்; கூரையெங்கும் இயற்கையைக் காப்பியடிக்கும் வர்ணக் கலவைகள். ராஜாத்திப் பூமரம்போல் குப்குப் பென்று இடையிடையே சிவப்புத் திடல்கள் விழுந்த பச்சைத் துணி ஒன்று...மாலை வானம் மாதிரி ஒன்று...இப்படி...

அவ்வூரிலிருப்பவர்கள் வாழ்நாள் முழுக்க அண் ணாந்து பார்த்தபடியே கழித்துவிடுவார்கள். அவ்வள வுக்கு அந்த ஊரையே துணிக் கூரையால் மூடி இருக் கும். நடக்கிற காரியம் கைக்காரியம் எல்லாமே அண் ணாந்தபடியேதான். ஏன் அவளுக்கு அப்போது நடக் கும் பிரசவ சிகித்சையைக் கவனிக்கிற டாக்டர், நர்ஸ் போன்றாரே அண்ணாந்து சொக்கிப்போன நிலையில் தான் காரியம் செய்கிறார்கள். அவ்வளவுக்குத் துணி யில் சொக்கி, அதையே உற்பத்தியாக்கி, அதிலேயே வாழ்க்கையை அமைத்த ஊர் அது. ஊரின் பல இடங்களில் வானமே தெரியாமல் துணிக்கூரை மூடி இருக்கும். வெகு காலத்தின் முன்னால் பல மஹான் கள் தோன்றி ஆடையின் அவசியத்தை உணர்ந்து, அந்த துணியைப் பரப்பி, மனிதர் யாவரும் காணுவதுக் காகவே இப்படி துணிக்கூரை ஏற்பாடும் செய்து வைத் தார்கள் என ஐதீகம். இந்த ஏற்பாட்டால் எல்லாத் துணிகளையும் எல்லாரும் ரசிக்கலாமே என்று பிறகு தோன்றிய மஹான்கள் வியந்துகொண்டிருந்தார்கள். அந்தக் காலத்துக்கு அவ்வளவு எட்டி மனசை செலுத்திவிட்டாலும் அவள் தற்போது இந்த ஏற்பாட் டால் புளகாங்கிதம் அடைந்துகொண்டிருக்கிறாள்......

அவளது கண்ணுக்கு மங்கலாக இவ்வளவு தெரிந் தாலும், பலவீனம். அந்தப் பலவீனத்தையும் திடீ ரென பிருண்டி எறிந்தது ஒரு வீறிட்ட குரல். குரல் அவளது குரல்தான், ஹ்ருதயத்திலிருந்து ஒரு புது சக்தி எழும்பி அவளை மூடியது உடம்பு சில்லிட உணர்ந்தாள். பிறகு விக்கி விக்கி அழுது ஓயும் குரல் மட்டும் தெளிவாகக் கேட்கிறது. இது யார் குரல்? தன் குரல்தானா'

அவள் பார்வை மாறியது. துணிக் காட்சி எப் போது மறைந்தது என்று தெரியவில்லை. அவள் விசுக்'கென்று எழும்பி உட்கார்ந்து விட்டாள். முழங் கால்களினிடையில் ரத்தச் சகதியில் குழந்தை. அவ ளின் குழந்தை.

தன்னை போலவே—பிறந்த மேனியில்—பிறந்த குழந்தையும் தான் கூடவா? பயங்கர வெட்கம் பீடித்தது. தான் பெற்றுக்கொள்ளக் கிடந்தவள், குழந்தை இப்போதான் பிறந்தது. ஆனால் இது என்ன? இது?

டாக்டர்கள், நர்ஸுகள், இவர்களின் துணி எல்லாம் எங்கே?

அவள் பிறந்த குழந்தையை அள்ளித் தன்னையே போர்த்துக்கொண்டு கத்தினாள்.—அவ்வளவு சக்தி எங்கிருந்தடியம்மா வந்தது அவளுக்கு—ஏய் டாக்டர், நர்ஸம்மா! சீச்சீ! என்ன உங்களுக்கு? அண்ணாந்தே நிற்கிறீங்க?'

ஒரு நிமிர் மௌனம். அண்ணாந்த தலைகள் குனிய வில்லை. மீண்டும் குரல்கள். காதில் பிரசவ வார்:ட் குரல்கள் அப்போதான் ஏறின. 'எவ்வளவு துணி... அது எனக்கு...இல்லை இதைத்தான் ராத்திரிக்கு உடுக்க வேணும்.. எனக்கோ எதை எடுக்கிறதென்றே தெரியவில்லையடி.' கசமுச கசமுச என்று... அங்கங்கே விமர்சனக் குரல்கள்.. பாதிப்பேருக்குத் துணிகளைப்பற் றிய கர்வத்தில் வேறு தலைநிமிர்வு. இந்தத் தலைகளா குனியும்?

அவள் களைப்பில் அசந்த புன்னகையோடு விழுந் தாள். உடம்பை குழந்தை போர்க்கிறது. வீடு போகும்வரை...ஏன், குழந்தை பிறந்ததே வீடுவந்த மாதிரிதானே...குழந்தை இல்லாமல் வீடா?

கூடல்

நான் சந்தனம்,
பூசிக்கொள்,
மணம் பெறுவாய்.
நான் மலர்,
சூடிக்கொள்,
தேன் பெறுவாய்.
நான் நதி,
என்னில் குதி,
மீனாவாய்!
நான் காற்று
உறிஞ்சிக் கொள்,
உயிர் பெறுவாய்—
நான் உயிர்,
கூடிக்கொள்,
உடம்பாவாய்.

எஸ். வைத்தீஸ்வரன்

புத்தகங்கள்

1. அஞ்சலி (ரூ. 4–50)
2. கங்கா (ரூ. 3–00)
3. ஜனனி (ரூ. 3–50)

—சிறுகதைத் தொகுதிகள்.

ஆசிரியர்: லா. ச. ராமாமிருதம்.

வெளியீடு: கலைஞன் பதிப்பகம், தியாகராயநகர், சென்னை 17.

லா. ச. ரா. கதைகளின் தொகுப்புகள் தொடர்ந்து கிடைத்திருப்பதைத் தமிழ்நாட்டின் அதிர்ஷ்டம் என்றே சொல்லலாம். பல வருஷங்களுக்கு முன்பு அவருடைய கதைகளை ஒரு தொகுதியாக வெளியிட அவரது அன்பர்கள் சிலர் பெரும் முயற்சிகள் எடுத்துக் கொண்டார்கள். அதன் விளைவாக 'ஜனனி' முதலிய கதைகளின் முதல் பதிப்பு வெளியாயிற்று. அதற்குப் பிறகு அவருடைய கதைகளில் சில புத்தக உருவம் பெறுவதற்கு அநேக ஆண்டுகள் பிடித்தன. 'கலைஞன் பதிப்பகம்' 'இதழ்கள்' என்ற தொகுதியை வெளியிட்டது. அடுத்து 'பச்சைக் கனவு' வந்தது. சமீப காலத்தில் மற்றும் மூன்று தொகுதிகள் தயாராகி உள்ளன. 'இவற்றில் 'ஜனனி' இரண்டாம் பதிப்பு ஆகும். ஆகவே, லா. ச. ரா. கதைத் தொகுதிகள் ஐந்து வாசக உலகத்துக்கு நல் விருந்தாகக் கிட்டியுள்ளன.

தரம் அறிந்து, நல்ல புத்தகங்களை வெளியிடும் பணி தமிழகத்தில் மிக அபூர்வமாகத் தான் நடைபெறுகிறது. பத்திரிகைக்காரர்கள், இலக்கிய அன்பர்கள், பொதுவான வாசகர்கள், விமர்சகர்கள் எல்லோராலும் 'மிகச் சிறந்த எழுத்தாளர்' என்று போற்றப்படுகிறவர்களின் எழுத்துக்கள் கூட நூல் வடிவம் பெறுவதற்கு 'வேளையும் பொழுதும் வரட்டும்' என்று காத்துக்கிடக்க வேண்டிய அவல நிலைதான் இங்கு நீடிக்கிறது. அதனுல் தான் லா. ச. ரா.வின் கதைகள் தொடர்ந்து தொகுப்புகளாக வந்திருப்பதை 'அதிர்ஷ்டம்' என்று குறிப்பிடுகிறேன்.

லா. ச. ரா.வின் எழுத்தாற்றல் குறித்தும், கதைகள் பற்றியும் 'எழுத்து' வாசகர்களுக்குப் புதுசாக எதுவும் சொல்வதற்கில்லை. தமிழ் சிறுகதையை இலக்கியத் தரத்துக்கு உயர்த்தி, உலகத்துச் சிறுகதை இலக்கிய சிருஷ்டி கர்த்தாக்களில் எவருக்கும் பின்னிடாத வகையில்–சில விஷயங்களில், பிறநாட்டு இலக்கியப் படைப்பாளிகளையும் பின்னுக்குத் தள்ளும் விதத்தில்–உயர்ந்த படைப்புகளை ஆக்கி, தமிழை வளம் செய்துள்ள (செய்து வருகிற) ஒரு சிலருள் ராமாமிருதம் முக்கியமானவர். சொல்லைக்கொண்டு அற்புதங்கள் செய்து மகிழும் கதைஞர் அவர். தன்னுள்ளேயே–தான் ஒரு மையமாகிவிட்ட தனது குடும்பச் சுழலுக்குள்ளேயே–மனித வாழ்வு முழுவதையும், அகண்ட உலகம் பூராவையும், ஆதி முதல் ஊழி வரை உள்ள சிருஷ்டித் தத்துவம் முழுமையும் கண்டு, உணர்வுகளை ஆடவிட்டு, எண்ணங்களை ஓடவிட்டுக் கொண்டிருக்கும் அகநோக்குக் கலைஞர்.

எனவே, அவருடைய எண்ணங்கள், அவருடைய வேதனைகள், அவருடைய வேட்கைகள், அவருடைய ஆத்மதாபம் எல்லாம் திரும்பத் திரும்ப அவருடைய கதைகளில் தலைகாட்டுகின்றன. ஒரே விஷயம் இரண்டு மூன்று கதைகளில் தலையெடுப்பதைத்தவிர்க்க முடியாமலும் போகிறது. லா. ச. ரா. வே கூறுகிருர்: 'நடந்து கொண்டிருப்பதுதான் திரும்பத் திரும்ப நடந்து கொண்டிருக்கிறது. இத்தனை கதைகள் எழுதியதும், இனி எழுதப்போவது எத்தனையானுலும், அத்தனையும் நித்தியத்துவத்தின் ஒரே கதையின் பல அத்தியாயங்கள் தான்.'

லா. ச. ரா. சொல்லிலும் பொருளிலும் கதை எழுதும் முறையிலும் சோதனை செய்துகொண்டே இருக்கிருர். இதழ்கள், கணுக்கள், பஞ்ச பூதக் கதைகள் என்பனவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

ஜலம், அக்னி, பூமி, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களையும் கருவாக (அல்லது பகைப்புலமாக) கொண்டு அவர் படைத்த தரங்கிணி, ஜமதக்னி, பூரணி, காயத்ரீ, ஏகா ஆகிய கதைகள் அற்புதமானவை. அவைதான் 'அஞ்சலி' என்ற தொகுதியில் அடங்கியிருக்கின்றன. எண்ணத்திலும், உணர்விலும், உள்ள எழுச்சியிலும், கற்பனையிலும் மனம் கும்மாளியிட்டு, சொல் கொண்டு விளையாடி, அந்த ரஸானுபவத்தை மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்ல முயன்று, வெற்றி பெற்ற சாதனைகளே இக் கதைகள்.

யோகம், புற்று, அரவான், ஜனனி, பூர்வா, கொட்டு மேளம் போன்ற உணர்ச்சிமயமான சொல் சித்திரங்கள் 'ஜனனி' கதைத் தொகுதியில் இருக்கின்றன. லா. ச. ரா.வின் சிறுகதை என்பதே பல கதைகளைத் தன்னகத்தே கொண்ட தனிரக அனுபவ ஒலி பரப்பு எனும் எண்ணத்தை இக் கதைகள் ரசிக உள்ளத்தில் உண்டாக்கும்.

அவருடைய கதை எழுதும் சோதனையின் ஆரம்ப கட்டத்தில் எழுதப்பட்ட 'கறைபட்ட இலை' என்ற சாதாரணப் படைப்பு முதல், அவர் எழுத்தாற்றலின் பூரணத்துவத்தை எய்திவிட்ட காலத்தில் எழுதப்பெற்ற 'குரு–க்ஷேத்திரம்' ஈருக, பலதரப்பட்ட, பலசுவைக் கதைகள் பத்து 'கங்கா' என்ற தொகுப்பில் அடங்கியுள்ளன.

'எத்தனை விதங்களில் எழுதினுலும், நான் எழுதுவது நான் என் பிறவியுடன் கொண்டு வந்திருக்கும் என் கதைதான்; உலகில்–அது உள் உலகமோ வெளியுலகமோ, அதில் நடக்கும் அத்தனையிலும், அத்தனை யாவும் எனக்குக் கிட்டுவது என் நேரக்குத்தான். ஆகவே நான் எனக்காகவே வாழ்ந்தாலும் சரி, யாருக்காக அழுதாலும் சரி, அப்படி 'என் நோக்கில் நான்தான் இயங்குகிறேன்' என்று குறிப்பிடுகிருர் லா. ச. ரா.

அவருடைய நோக்கு தனித்துவம் பெற்றது. ஆகையால் அவர் கதைகளும் தனித்தன்மை பெற்ற இலக்கியப் படைப்புகளாக விளங்குகின்றன. அவற்றை தனித்தனியாகவும், மொத்தமாகவும், நினைத்த போதெல்லாம் திரும்பத் திரும்ப எடுத்தும், படிப்பதற்கு உதவி செய்துள்ள கலைஞன் பதிப்பகத்தார் இலக்கியப் பிரியர்களின் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியவர்கள். இதில் சந்தேகமில்லை.

வல்லிக்கண்ணன்

மலரும் மணமும்

பி. எஸ். ராமையா

'கடைசி கட்டி மாம்பழம் யாருக்கு?' என்பாள் சானுப் பாட்டி

'எனக்கில்லே பாட்டி, ராமதாசுக்குத்தான். அவன் தானே குட்டியானைபோலே இருக்கணும்? அவனுக்குத் தான் கடைசிப்பிடி' என்பாள் செல்லம்.

சாப்பாட்டில் மாத்திரம்தான் இப்படி யென்றில்லை. எல்லாவற்றிலும் நல்லதெல்லாம் ராமதாஸுக்குத் தான் சேரவேண்டுமென்பாள் செல்லம். சானுப் பாட்டிக்கு அந்தக் குழந்தையின் தியாகத்தை யறிந்துகொள்ளப் போதிய சக்தியில்லை. 'இதென்னடி இந்தக் குழந்தை அதிசயமா யிருக்கு! எல்லாம் ராமதாஸுக்கு என்கிறதே!' என்று ஆச்சரியப்படுவாள். அவன் சந்தோஷமாகச் சிரித்தால் செல்லமும் சிரிப்பாள். அவன் அழுதால் அவளும் அழுவாள்.

வீட்டிலே பாட்டி யொருத்தி யிருந்து நாலைந்து குழந்தைகளைத் தன்னைச் சுற்றி உட்கார வைத்துக்கொண்டு சாதம் பிசைந்து கையில் போட வாங்கியுண்டவர்கள்தான் அதன் இன்பத்தை ஊகித்துக்கொள்ள முடியும். அதிலும் கடைசிப் பிடிக்குத் தேவாமிர்தமும் இணையாகாது; அவ்வளவு ருசி. அதற்காக எனக்கு உனக்கென்று சண்டை. கிடைக்காத குழந்தை, தனது ஆஸ்தியே பறிபோய்விட்டதுபோலக் கைகால்களை உதறிக்கொண்டு வீறிட்டழும்.

செல்லத்துக்கு ஏழுவயதா யிருக்கும்பொழுதே அவள் தன்னுடைய தாய் மாமனான லக்ஷ்மணய்யர் வீட்டில் வளர வந்துவிட்டாள். ஒருவர் பின்னொருவராக அவளது தாய் தந்தையர் அவளை அநாதையாக விட்டுவிட்டு இறந்துவிடவே, லக்ஷ்மணய்யர் அவளைத் தமது வீட்டிலேயே வைத்து வளர்த்துவந்தார். அப்பொழுது ராமதாஸுக்கு வயது பன்னிரண்டு.

அந்தக் குழந்தைகளின் அன்னியோன்னியத்தையும், ஒருவர் விஷயத்தில் மற்றவர் காட்டிய அக்கறையையும், அன்பையும் காணும்பொழுதெல்லாம் அவ்விருவரும் புருஷனும் மனைவியுமாக எவ்வளவு அழகாய்க் குடும்பம் நடத்துவார்களென்பதை, சானுப் பாட்டி மனதிற்குள்ளாகவே படம் போட்டுப் பார்த்துக்கொள்வது வழக்கம். அப்படியிருந்தும் ஒவ்வொரு சமயம் செல்லம் தன்னைப் பற்றிய நினைவேயின்றி எல்லாம் ராமதாஸுக்கே என்று சர்வ சுக பரித்தியாகம் செய்வதைக் கண்டு அவள் பிரமித்துப் போய்விடுவாள்.

2

லக்ஷ்மணய்யர் அந்தக் குழந்தைகளின் சினேகத்தின் வலிமையை நன்றாக அறிந்திருந்தார். ஆனாலும் அவர் செல்லத்தை வெளியே கலியாணம் செய்து கொடுக்கத் தீர்மானித்துவிட்டார். செல்லம் தாய் தந்தையற்ற அநாதை. அவளது பெற்றோர் லக்ஷ்மணய்யரிடம் அவளை மாத்திரம் – ஒரு செல்லாக் காசுகூட வைக்காமல்—விட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். ஆகையால் செல்லத்தை வேறெங்கேயாவது கலியாணம் செய்து கொடுத்துவிட்டால் ராமதாஸுக்கு நல்ல பணக்கார வீட்டுப் பெண்ணைப் பார்த்துக்கொள்ளலாம்; ரொக்கமாக வரதக்ஷிணை கிடைக்கும்; அவனுக்காக வாங்கும் வரதக்ஷிணையில் செல்லத்தின் கலியாணத்திற்காகச் செய்யும் செலவையும் வசூலித்துவிடலாம் என்பதுபோன்ற கருத்துகள் கொண்டே, அவர் செல்லத்தின் கலியாணத்திற்காக வெளியே வரன் தேட ஏற்பாடுகள் செய்தார்.

அப்பொழுது செல்லத்துக்கு வயது ஒன்பதாகிக் கொண்டிருந்தது. அவர்களிருந்த கிராமத்திற்கு நாலைந்து மைல் தூரத்திலிருந்த வேறொரு கிராமத்தில் புரோகிதம் செய்துகொண்டிருந்த ஒருவருக்கு அவளை இரண்டாந்தாரமாகக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

சானுப் பாட்டி அதைக் கேள்விப்பட்டவுடன் நிரம்பவும் வருந்தமடைந்தாள். ஆனால் அவளுக்குத் தனது பிள்ளை லக்ஷ்மணய்யரிடம் பேசப் பயம். 'அந்தக் கடன்காரி குழந்தையை இப்படி அநாதையாக விட்டுவிட்டுப் போகாமலிருந்தால்?' என்று நினைத்து இரண்டு துளி கண்ணீர் விடுவதைத் தவிர அவளால் வேறு ஒன்றும் செய்ய இயலவில்லை அவளுடைய ஹிருதயத்தில் ஒரு முள் தைத்ததுபோ லிருந்தது.

செல்லத்தின் கலியாணம் கூடியவரை சிறப்பாகவே நடந்தது. ராமதாஸுக்காவது அல்லது செல்லத்துக்காவது அந்தக் கலியாணத்திற்கு என்ன அர்த்தமென்பதே தெரியாது. இருவரும் வழக்கம்போல் ஒருவர் தலைமயிரை இன்னொருவர் பிடித்திழுப்பதும், ஆடுவதும் பாடுவதுமாக விளையாடிக்கொண்டே கலியாண வைபவங்களில் கலந்துகொண்டனர்.

கலியாணம் நடந்து நான்கு வருஷங்களாகிவிட்டன. அவ்விருவரும் உருவத்திலும் வேறு சில வெளியுலக விவகாரங்களிலும் மாறித் தோன்றினரே யல்லாமல், அவர்களது மனத்தில் மட்டும் ஒருவரைப்பற்றியொருவர் கொண்டிருந்த நேசம் முன்போலவே யிருந்தது. அடிக்கடி அவர்கள் விளையாடிக்கொண்டு சிரிக்கும்பொழுது சானுப்பாட்டி 'நாளைக்கு உன் ஆம்படையானகத்துக்குப் போனால் இப்படி யெல்லாம் விளையாட முடியுமா?' என்று சொல்லுவாள். அப்பொழுது அவ்விருவரும் கொஞ்சம் மனங் கலங்குவார்கள். அவ்வளவுதான், அடுத்த நிமிஷம் ராமதாஸ் செல்லத்தைக் கேலி செய்வான். அவள் 'போடாப்பா. நான் யாராத்துக்கும் போகமாட்டேன்' என்பாள்.

ராமதாஸுக்குப் பள்ளிக்கூட நாள் முடிந்து லீவு வருகிறதென்ற எண்ணம் இருவருடைய உள்ளத்திலும் கட்டிலடங்காத உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் கூட்டிக்கொண்டு வந்து தோன்றும். லீவு முடிந்து பள்ளிக்கூடத்திற்குப் போவதென்றால் ராமதாஸுக்கு விளக்கெண்ணெய் குடிப்பதுபோலிருக்கும். செல்லத்துக்கும் அப்படியே. ஆனால் அவன் புறப்படும்பொழுதெல்லாம் எதிரில் செல்லம் வரவேண்டுமென்பான். அவள வந்தால் சகுனம் நன்றாயிருப்பதாகவும், கஷ்டமின்றிப் பரீக்ஷையில் தேறிவிட முடிகிறதென்றும் சொல்லுவான். அவளுக்கு அந்த விஷயத்தில் நிரம்பவும் சந்தோஷம். ஏதாவது சாக்கை வைத்துக்கொண்டு வாசலில் போய் விட்டு எதிரில் வருவாள்.

ராமதாஸ் 'இண்டர்மீடியட்' படித்துக் கொண்டிருந்தபொழுது செல்லம ருதுவான செய்தியும், அதன் பிறகு ஒரு வாரத்திற்கெல்லாம் அவள் விதவையான செய்தியும் வந்தன. செல்லத்துக்கு தான் வைதவ்யமடைந்த விஷயம் துக்கப்படவேண்டிய சங்கதி என்று மாத்திரம் தெரிந்தது. ஏன் துக்கப்படவேண்டும் என்று அவள் அப்பொழுது சரியாக உணர்ந்துகொள்ளவில்லை. சானுப்பாட்டி 'பிலாக்கணம்' போட்டு அழுததனால் அவளும் அழுதாள். அவ்வளவுதான். அதற்குமேல் அவளுக்கு அந்த விஷயத்தைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. இனிமேல், தான் புருஷன் வீட்டிற்குப் போகவேண்டிய அவசியமிராதே யென்ற திருப்தியும் அந்தக் குழந்தையின் உள்ளத்தில் தோன்றியது.

3

'ராமதாஸ் பி. ஏ. படிக்க ஆரம்பித்தவுடன் லக்ஷ்மணய்யர் கலியாணச் சந்தையில் தமது சரக்குக்கு எவ்வளவு கிராக்கியிருக்கிறதென்ற விஷயமாக ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார். கடைசியாக ஒரு பெண் பிடித்திருந்தது. வரதக்ஷிணையும் ரொக்கமாக நாலாயிரம் ரூபாய் கொடுக்கப் பெண் வீட்டார் தயாராக விருந்தனர். ஆகையால் உடனே புறப்பட்டு வரும்படி ராமதாஸுக்கு அவன் தந்தை கடிதம் எழுதினார். அவனும் வந்து சேர்ந்தான்.

அவன் முன்தடவை மதுரைக்குப் போனபொழுது இருந்ததைவிட அப்பொழுது செல்லம் உருவத்தில் நிரம்பவும் மாறிப் போயிருந்தாள். இதழ் விரித்துப் புன்னகையுடன் தன்னைச் கற்றி நறுமணத்தை விசிறிக்கொண்டிருக்கும் ரோஜாமலரைப்போல அவள் காணப்பட்டாள். அவளைப் பார்த்தவுடன் அவனுடைய வயிற்றில் பகீரென்று நெருப்புப் பற்றியது போன்ற ஒரு உணர்ச்சி தோன்றியது. அத்தகைய அழகி தன்னுடைய உடைமைப் பொருளாக விருக்கவேண்டியது போய், அவள் இந்த உலகத்தில் பயனற்ற ஒரு பொருளாகி விட்டாளென்று எண்ணியவுடன் அவனுடைய நெஞ்சம் பட்டபாட்டை வர்ணிப்பது இயலாத காரியம்.

அன்று மாலையில் லக்ஷ்மணய்யர் ஏதோ வேலையாகப் புறப்பட்டுக்கொண்டிருந்தார். அதை யறியாத செல்லம் தற்செயலாக எதிரே வந்துவிடவே அவர் நிரம்பவும் கோபத்துடன், 'சனியன் எங்கேயாவது மூலையில் போய்க் கிடப்பதற்கென்ன கொள்ளை? வயசாகச்சே கடாமாடாட்டமா? ராமதாஸ்கிட்ட இன்னம் என்ன விளையாட்டு' துக்கிறியாட்டமா எதிரில் வருகிறது' என்று உரத்துத் திட்டிவிட்டு வீட்டிற்குள் திரும்பிப்போய் உட்கார்ந்துகொண்டார்.

அவர் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டதுமுதல் ராமதாஸின் மனத்தில் புதியதொரு எண்ணம் தலைகாட்ட ஆரம்பித்தது. அவன் அதைப்பற்றி நினைக்க நினைக்க அது அவனுடைய மனத்தில் உறுதியாக நிலைகொள்ளத் தொடங்கியது. 'தான் செல்லத்தையே ஏன் கலியாணம் செய்துகொண்டு விடக்கூடாது?' என்று யோசனை செய்யலானான். அதன் பிறகு அவளது வருகை அபசகுனமாயிராதல்லவா? அப்பொழுது தன்னுடன் விளையாடக்கூடாதென்று அவளை யார் தடுக்க முடியும்?

அதைப் பற்றியே அவன் அன்றிரவு முழுதும் சிந்தித்துக்கொண்டிருந்தான். மறுநாள் பொழுது விடியுமுன் ஒரு தீர்மானம் செய்துகொண்டவனாய் கிணற்றடியில் செல்லம் தனியாக இருந்த சந்தர்ப்பம் பார்த்து, 'செல்லம், அப்பா ஏதாவது சொன்னால் நீ அதைப் பற்றி வருத்தப்படாதே. நான் இந்தப் பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ளப் போவதில்லை. ஒரு யோசனை தோன்றுகிறது. நீ என்ன சொல்லுவாயோ என்றுதான் யோசிக்கிறேன்' என்றான்.

'நீ சொல்வதற்குக்கூட நான் எதிர் சொல்லுவேனா?'

'உன்னையே நான் கலியாணம் செய்துகொண்டு விடலாமென்று தீர்மானம் செய்துவிட்டேன். ஏன் அப்படிப் பார்க்கிறாய்? இப்பொழுது விதவா விவாகம் சர்வ சாதாரணமாகிவிட்டது. அப்பா என்ன சொல்லப்போகிறார்? இன்னம் ஒரு வருஷம் எப்படியாவது கலியாணப் பேச்சே வராதபடி செய்துவிடுகிறேன். பிறகு அவரை இலகுவாகச் சமாதானம் செய்து இதற்குச் சம்மதிக்கச் செய்துவிடுகிறேன்' என்றான் ராமதாஸ்.

செல்லத்துக்கு அதிலெல்லாம் நம்பிக்கையில்லை. இருவரும் அவ்வாறு பேசிக்கொண்டபொழுது ஒருவகையான மகிழ்ச்சியடைந்தனரானாலும், அதன் காரணம் ஒன்றும் அவர்களுக்குச் சரியாக விளங்கவில்லை. அந்தப் பேச்சின் பலாபலன்களைப்பற்றி அவர்கள் அப்பொழுது ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கவுமில்லை. ஆனால் அதில் ராமதாஸுக்கு விருப்பமிருந்தால் செல்லத்துக்கும் அது விருப்பந்தான். சம்மதிக்கச் அவள் சரியென்று சொல்லி விட்டாள்.

மறுநாள் பெண் வீட்டார் பிள்ளையைப் பார்க்கவந்தனர். பிள்ளை அவர்களுக்கு பிடித்திருந்து. ஆனால் அதற்கடுத்த நாள் ராமதாஸ் அவர்கள் வீட்டிற்குச் சென்று பெண்ணைப் பார்த்துவிட்டு வந்தவுடன், 'அப்பா எனக்கு பெண் பிடிக்கவில்லை. நான் நிச்சயமாக அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ளமாட்டேன்' என்று சொல்லிவிட்டான்.

4

மேலும் ஒரு வருஷம் சென்றது. ராமதாஸ் பி. ஏ. பாஸ் செய்துவிட்டுச் சென்னைக்குச் சென்று லா காலே-

ஜில் சேர்ந்தான். அவன் சென்னைக்குச் செல்லுமுன் ஒரு விசேஷ சம்பவம் நிகழ்ந்தது. அதுதான் அவனுடைய காதல் பரீக்ஷையென்பதை அவன் உணரவில்லை. அதில் அவன் தவறிவிட்டான்.

நமது ஹிந்து சமூகத்தில் வைதவ்யமடைந்த ஒரு பெண் சிற்றின்ப நினைவுகளில் மனத்தைச் செலுத்த விடாதபடி செய்யச் சில கட்டுப்பாடுகள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் சில மிகமிகக் கடுமையானவை. அவற்றின் மூலம் அவள் சிற்றின்ப நினைவே கொள்வதற்கிடமின்றிச் செய்யப்படுகிறதென்பது உண்மை ஆனால் அந்தக் கட்டுப்பாடுகளையும் மீறி ஒரு இளமங்கையின் உள்ளத்தைக் குலைத்துவிடும் சந்தர்ப்பங்களும் பல விருக்கின்றன.

தற்செயலாக வீதிவழியே சென்ற ஒரு யௌவன புருஷனது பார்வையினின்றும் அவளது மனத்தை மூடிக்கொண்டிருக்கும் திரை விலக்கப்பட்டு விடலாம். அவனது விகாரமான பார்வை அவளது உள்ளத்தில் அந்த நெருப்பை எழுப்பிவிடலாம். அல்லது இளந்தம்பதிகளிருவர் மோகப் பார்வையாக ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டிருக்கும் காட்சியை அவள் காணும்பொழுது இவளது நெஞ்சத்தில் புதிய ஒரு நெகிழ்ச்சி தோன்றிவிடலாம். தன்னுடனொத்த இளம் பெண்கள் பேசிக்கொண்டிருக்கையில் அவள் காதில் விழும் ஒரு சொல், அங்கு ஒரு புதிய உணர்ச்சியே ஊக்கிவிடக்கூடும். இவை எதுவுமின்றி இயற்கையே அவளது ஹிருதயத்தைத் திறந்துவிட்டு, 'அதோ பார்! பெரிய ஒரு இன்பம் உனக்காகக் காத்திருக்கிறது அதை இந்த வயதில் கவனிக்காமலிருக்கிறாயே! பைத்தியக்காரி!' என்று அவளைத் தூண்டிவிடக்கூடும்.

இவையாவும் கூடியோ அல்லது இவற்றில் ஒன்று மட்டுமோ, இவைகளல்லாமல் வேறெந்தக் காரணத்தாலோ செல்லத்தின் மனத்தில் அந்தப் புதிய உணர்ச்சி எழுந்துவிட்டது. அது நாளுக்குநாள் ரொம்பவும் வேகத்துடன் பொங்கி அவள் இரவு பகல் ராமதாஸ் ஞாபகமாகவே இருந்து பதறும்படி செய்து கொண்டிருந்தது.

அப்பொழுது ராமதாஸ் பி ஏ. பரீக்ஷைக்கு எழுதிவிட்டு ஊருக்கு வந்திருந்தான். அவனைத் தினந்தோறும் நேருக்கு நேர் காணக் காண செல்லம் தன்னை மறந்து நிற்கத் தொடங்கினாள். அவனை அவள் பார்த்த பார்வைகளிலெல்லாம் கெஞ்சுதலும் ஆவலும் கலந்திருந்தன. ராமதாஸும் அதைக் கவனித்தான். அவளுடைய நிலைமை அவனுக்கு நன்றாக விளங்கிவிட்டது; ஆனால் அவன் என்ன செய்வான் பாவம்! அப்பாவிடம் எப்படிச் சொல்லுகிறது' விதவா விவாகம் அவர் இருக்கும் வரை ஆகாத காரியம்.

ஒருநாள் இருவரும் தனியாக வீட்டிலிருந்தனர். அப்பொழுது தற்செயலாக நேர்ந்த ஒரு சம்பவத்தால் ஒருவரையொருவர் தொட்டுக்கொள்ள நேர்ந்தது. உடனே இருவருடைய உள்ளத்திலும் விவரிக்க வியலாத ஒரு உணர்ச்சி யெழுந்தது.

'செல்லம்!' என்று அழைத்து ராமதாஸ் அவளிடம் ஏதோ சொல்ல விரும்பினான். அவனால் தனது உள்ளக் கருத்தை வெளியிட முடியவில்லை. அவன் அழைத்தவுடன் செல்லம் ஆவலின் உருவமாக அவன் முன் வந்து நின்றாள். அவளுடைய கண்களும் முழு உருவமும் கெஞ்சுதலின் சித்திரமாக விருந்தன ஒருவரது உள்ளக் கருத்தை மற்றவர் நன்றாக அறிந்து கொண்டனர். அவன் ஒரு வார்த்தை சொல்லமாட்டானா வென்று செல்லம் ஏங்கினாள். அந்த வார்த்தையைச் சொல்லப் போதிய தைரியம் வராதா என்று ராமதாஸ் துடித்தான்

கடைசியாக ராமதாஸ், 'செல்லம், நான் பட்டணம் போகப் போகிறேன். இந்த வருஷம் எப்படியாவது அப்பாவிடம் சொல்லி நம்முடைய கலியாணத்திற்குச் சம்மதம் பெற முயற்சிக்கிறேன் அவர் முடியாதென்று மறுத்துவிட்டாலும்கூட நான் பின்னடையப் போவதில்லை' என்று சொல்லிவிட்டு வெளியே போய் விட்டான். செல்லத்தின் கண்கள் ஏமாற்றத்தால் மழுங்கின. அவற்றினின்றும் இரு கண்ணீர்த்துளிகள் முத்துக்களெனக் கீழே உதிர்ந்தன.

5

மேலும் ஒரு வருஷமாயிற்று. ராமதாஸ் சென்னையிலிருந்து விடுமுறைக்குக்கூட வரவில்லை. அவனுக்குச் செல்லத்தைப் பார்க்கப் பயமாயிருந்து சமூகக் கட்டுப்பாடுகள, தந்தையின் கோபமும் முதலிய தளைகள், அவனது உள்ளத்திலெழுந்த இனிய பிரேமையை தலையெடுக்க வொட்டாமல் செய்து அவனைக் கோழையாக்கிவிட்டன.

திடீரென்று ஒருநாள் லக்ஷ்மணய்யர் நிரம்பவும் அபாயகரமான வியாதியுடன் படுத்திருப்பதாகத் தந்தியொன்று வந்தது. ராமதாஸ் ஓடோடியும் ஊருக்கு வந்தான். லக்ஷ்மணய்யர் பேசவும் சக்தியின்றிப் படுத்திருந்தார். எங்கேயோ நிலங்களைப் பார்க்கச் சென்றிருந்த இடத்தில் காலில் ஒரு முள் தைத்தது அதிலிருந்து விஷமேறிவிட்டது. பிழைப்பது துர்லபமென்று வைத்தியர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

ராமதாஸைக் கண்டவுடன் லக்ஷ்மணய்யர் நிரம்பவும் ஆவலுடன் அழைத்துப் பக்கத்தில் இருத்திக் கொண்டார். அவன் கலியாணம் செய்துகொள்ள மறுத்து வந்ததையும், அதனால் வரக்கூடிய வரதக்ஷிணை நஷ்டத்தையும் கருதி அவன்மீது அவருக்குக் கொஞ்சம் மனஸ்தாபம்தான். இருந்தாலும் அப்பொழுது அவர் அவனிடம் தமது கொடுக்கல் வாங்கல் விஷயங்களைப் பற்றி மாத்திரம்தான் பேசினார். இரண்டு நாட்களுக்குப் பிறகு சிவலோகப் பிராப்தியடைந்தார்.

அதன் பின்னர் ஒரு மாதம் கழித்து சானுப் பாட்டி கிணற்றடியில் வழுக்கி விழுந்து அதே படுக்கையாக விழுந்து மரணமடைந்தாள். அவள் இறக்கும்பொழுது, 'அடே ராமு! குழந்தை செல்லம், தாயார் தகப்பனற்ற அநாதையடா! அவளுடைய கதிதான் ரொம்ப அநியாயமாய்ப் போய்விட்டது உன்னைத் தவிர அவளுக்கு வேறே யாருமில்லேயடா அவளைக் கைவிட்டுடாதேயடா அப்பா!' என்று சொல்லிவிட்டுச் சென்றாள்.

அந்தக் கெடுபிடியில் ராமதாஸ் தனது படிப்பைக் கொஞ்சகாலம் நிறுத்தி வைப்பதுதான் சரியென்று தீர் மானித்து ஊரிலேயே தங்கிவிட்டான். இரு முதியவர்களுடைய மரணச் சடங்குகளும் முடிந்த பின்னரே ராமதாஸ் செல்லத்தைப்பற்றிக் கவனிக்கத் தொடங்கினான்.

ஆனால் என்ன ஆச்சரியம்! செல்லம் முற்றிலும் உருமாறிப்போயிருந்தாள்; அவளுடைய உருவத்தில் அவன் ஒரு வருஷத்திற்கு முன் கண்ட தளதளப்பும், செழிப்பும் எங்கேயோ சென்று மறைந்துவிட்டன. அவளுடைய முகத்திலும் கண்களிலும் முன் அவன் கண்ட பிரகாசத்தை இப்பொழுது காணவில்லை. செடியினின்று பறித்தெறியப்பட்டு வாடி வதங்கிக் கிடக்கும் ஒரு மலர்போலத் தோன்றினாள். அவன் ஊருக்கு வந்ததுமுதல் அதுவரை அவனுடைய மனம் வேறு விஷயங்களில் ஈடுபட்டிருந்தமையால், அவளிடம் கண்ட மாறுதலை அவன் இப்பொழுதுதான் புதிதாக உணர்ந்து திடுக்கிட்டான். அதன் காரணம் தோன்றாது திகைத்தான்.

தற்சமயம் அவனுக்கு அவனே எஜமானன். முன்போல அவன் பயந்து பின்னடையவேண்டிய அவசியமில்லை. எனவே ஒருநாள் செல்லத்தினிடம் விவாகத்தைப்பற்றிய பேச்செடுத்தான். இப்பொழுது செல்லத்திற்கு முன்னிருந்த உற்சாகம் இருந்ததாகக் காணவில்லை. அவன் விரும்பினால் அந்த விவாகம் நடைபெறுவதில் அவளுக்கு ஆட்சேபணை எதுவுமில்லையென்று சொல்லிவிட்டாள்.

ஊரார் தூற்றலுக்கு அஞ்சாமல் அடுத்த மாதமே அவன் தனது மணத்திற்கு ஏற்பாடுகள் செய்தான். சென்னையில் விதவா விவாக சபையின் ஆதரவில் கலியாணம் செய்யத் தீர்மானம் செய்து, செல்லத்தையும் அழைத்துக்கொண்டு சென்னைக்கு வந்து சேர்ந்தான்.

விவாகம் நடந்த அன்று இரவு ஒரு பெரிய விருந்து நடத்தப்பட்டது. அதன் பின்னர் இருவரும் தனியாகச் சந்தித்தனர். அந்த நேரம் எப்பொழுது வருமென்று ஆவலுடன் காத்திருந்த ராமதாஸ் செல்லத்தை இரு கைகளிலும் வாரியணைத்துக்கொண்டான். ஆனால் அவள் உற்சாகமற்ற—உணர்வற்ற—ஒரு பதுமைபோல விருந்தாள். அதைக்கண்ட ராமதாஸ், 'என்ன செல்லம்! இந்தக் கலியாணத்தில் உனக்குச் சந்தோஷமில்லையா?' என்று வினவினான்.

அதைக்கேட்ட செல்லம் நிரம்பவும் சிரமத்துடன் புன்னகை செய்து, 'உன்னுடைய திருப்திக்கும் சந்தோஷத்திற்கும்தான் நான் இதற்குச் சம்மதித்தேன். இந்த ஜன்மம் முழுவதும் உனக்குப் பணிவிடை செய்யலாமென்ற திருப்தியைத் தவிர எனக்கு இதில் வேறு சந்தோஷமேயில்லை. நான் உன்னுடைய உடைமை. என்னை நீ என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். உயிருள்ளவரை நீ எப்படி வேண்டுமானாலும் இந்தக் கட்டையை பயன்படுத்திக் கொள்ளலாம்' என்று சொல்லி ஆயாசத்துடன் பெருமூச்செறிந்துகொண்டே அவன்மீது சாய்ந்தாள்.

'என் கண்ணல்லவா? எனக்காக என் செல்லம் எதை வேண்டுமானாலும் தியாகம் செய்துவிடுவாள்' என்று சொல்லிக்கொண்டே அவளைத் தழுவிய ராமதாஸ், அவளுடைய முகத்தில் தோன்றிய ஒரு புதிய மாறுதலைக் கண்டு திடுக்கிட்டான்.

அவளுடைய முகம் வெளிறடைந்தது. கண்கள் பஞ்சடைந்து ஒளியிழந்து தோன்றின. அவளது மெல்லிய சரீரம் அவனது அரவணைப்பில் துவண்டு விழுந்தது. அடுத்த வினாடி ராமதாஸ் தனது கரங்களில் மணமற்ற மலரே தங்கியிருந்ததென்பதை உணர்ந்தான்.

(தமிழ்ச் சுடர் நிலையம் வெளியீடான 'மலரும் மணமும்' என்ற சிறுகதைத் தொகுப்பு புத்தகத்திலிருந்து, நன்றி தெரிவித்து பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.)

சொல்

ந. பிச்சமூர்த்தி

மேடைப் பிரசங்கி
சொல்லால் அடித்தார்
பல்லால் சிரித்தார்
அம்பால் கொடுத்தார்
கழையால் வெளுத்தார் :

"கோயிலில் செட்டியார்
வலம் செய்து வந்தார்—
தேர்தல் திருநாளுக்கு
இருநாள் முன்பாக
வாயில் திருநாம
குலம்வந்து போயிற்று.

'முதலாளி பக்திக்கு
எதிராளி உண்டா?'

'தானாக எழுவதுபக்தி
தரையில் அடித்தெழும்
பந்தல்ல தம்பி.........

முதலாளியைப் பார்த்த
டாக்டரை
பார்த்ததும்
உதிரத்தின் ஏற்மாறு
உடலைக் குலைக்கும்
உலாச்சென்று வந்தால்
உடம்புடம்பாகும்''
மருந்தொன்று சொன்னதாய்
மூட்டை அவிழ்த்தார்........

சொல்லொரு சூது.
இருபுறம் ஓடும்
காக்கைக் கண்.
இருமுகம் தெரியும்
பேதக் கண்ணாடி.
காம்பில் படாமல்
மரத்தில் தாக்கி
மூர்க்கமாய் திரும்பிவரும்
எறிகல்.
உண்மை என்று
ஒருதலை கடிப்பதை
மரயை என்று மறுக்கும்
இருதலைப் பாம்பு.

விஷத்திற்கு மறுவிஷம்—
ரத்து.

ஓவியம்

நா. வெங்கடராமன்

முற்கால ஓவியம்
தற்காலப் புகைப்படம்.
தற்கால ஓவியமோ—
கற்காலம் நினைவூட்டும்
போர்ச்செவிலி வளர்த்த பிள்ளை.
அண்டத்தின் அணு.
ஆழ்கடலின் துளி.
ஊமையன் கனவு.
ஊர்வணங்கு லிங்கம்.
பௌத்தர்கள் போற்றும்
பல், நகம்.
நபிகள் நாயகத்தின் தலைமுடி.
மஞ்சளில் பிடித்த பிள்ளையார்.
முன்னோர்க்கிடும் பிண்டம்.
சித்தத்து முள்—வாங்கி.

வைகறை

உஷை உடுத்திய
வெண்பட்டுச் சேலையின்
சிவப்பு முன்றானை.
பாதத்து மருதாணி.
நீட்டிய ஒளி விரல்
நகப்பூச்சு.
படிகக் கன்னத்து
வெட்கச் சுழிப்பு;
செவ்விதழ் மலர்ச்சி.
நாசியில் ஜ்வலிக்கும்
கெம்புப் பொட்டு.
குங்குமம்.
சூளாமணி.

அந்தி

துயிலுமுன் பரிதி
தூக்கியெறிந்த
வெள்ளை வெற்றிலைக் காம்புகளை
ஆகாசத் தூசுக்கும்பல்
பொறுக்கி
மென்று
உமிழ்ந்த
எச்சில்.

என்ன வந்தது?

சி. மணி

வேலை விரட்டும் கும்பல் பறக்கும்
நடுத் தெருவில்
கிடந்தாள் கழன்று
விழுந்த லாடமாக.
நிறுத்திய காரோட்டி
பலகணி வழியே தலைநீட்டி
திட்டிக் கத்த
வாயெடுத்து
திட்டாமல் கத்தாமல்
வளைத்துச் சென்றான்.
ஒரிருவர்
திடுக்கிட்டு
தடுக்கிய கல்லை
வெறித்துப் பார்த்துச் சென்றனர்;
மற்றோர்
கண்ணில் பட்டிடுமோ என்று
திரும்பாமல் சென்றனர்.
கிடந்தாள் ஏன்
காரோட்டிக்கு நடுங்கவில்லை
பார்ப்போரைக் கண்டதும் நம்பிக்கை—
போட்ட விளக்காக—
நெஞ்சை நிரப்பவில்லை,
ஏமாற்றம் அணைக்கவில்லை
செல்வோரைக் கண்டும்
பல்லற்ற வாய் முனகவில்லை?
என்றைக்கும் இல்லாத வாழ்வு
இன்றைக்கு என்ன வந்தது?

எண்(ணம்)

ம. ந. ராமசாமி

எண்ணம்
வேறு
எண் வேறு?
எண்ணச் சுழலில்
எண்கள்
குறுகி
சூத்திரம் திரண்டது.
எண்கள் தம் படிவத்தில்
எண்ணம் வளர்த்து,
கோபுரம் கண்டன;
நதி நடுவில்
அணை எழுந்தது;
எலக்ட்ரான்
ஓடி
மின் வேகம் பாய்ந்தது.
எண்ணத்தின் லயமே
எண்களின் சரம்.
எண்கள் மிதக்க
எண்ணத்தின் பெருக்கம்.
எண்ணம், எண்
வேறு
வேறல்ல;
எண்ணிப் பார்!
எண்ண எண்ணத்
தொலையாது.

முன் தகவல்

இந்த ஆண்டு

புதிய புத்தகங்கள்

சத்யாக்ரகி

(சிறுகதைகள்) ரூ. 4·00

சி. சு. செல்லப்பா

வழித்துணை

(கவிதைகள்) ரூ. 2·00

ந. பிச்சமூர்த்தி

பதினெட்டாம் பெருக்கு

சிறுகதைகள் (அச்சில்)

ந. பிச்சமூர்த்தி

வல்லிக்கண்ணன் கதைகள்

(அச்சில்)

கு. ப. ரா. நாடகங்கள்

(அச்சில்)

சிட்டி கட்டுரைகள்

(அச்சில்)

மணல் வீடு

சிறுகதைகள் (அச்சில்)

சி. சு. செல்லப்பா

இன்னும் சில

முழு விவரம் அடுத்த ஏட்டில்

எழுத்து பிரசுரம்

19-A, பிள்ளையார் கோயில் தெரு,

சென்னை - 5

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19-A, Pilliar Koil Street, Madras-5.
Printed by M. Ramanatha Rao for Ceurtal Press, 97, Big Street, Triplicane, Madras-5.